255

# கண்ணன்

15-3-58

13 ந.பை



255/258
17 APR 1958
MADRAS



# வளரும் எழுத்தாளர் சங்கம்

சென்ற ஆண்டு ஜூலை மாதம் 'கண்ணன்' ஆசிரியர் திரு. ஆர்வி அவர்கள் தம் ஆசியுடன் திருச்சியில் துவக்கி வைத்த 'வளரும் எழுத்தாளர் சங்கம்' நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மிகவும் சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. இச்சங்கத்தைத் துவக்கியதன் குறிக்கோள்களில் முக்கியமானது, மாணவ எழுத்தாளர்கள் அடிக்கடி சந்தித்து அளவளாவி, எழுத்துத் திறமையோடு தம் பேச்சுத் திறமையையும் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்பதே. இக் கொள்கையைத் திறம்பட நிறைவேற்றி வருகிறது இச்சங்கம்.

துவக்க விழாவுக்குப்பின் பல சிறு கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றில் பிரபல எழுத்தாளர்களான அகிலன், சுகி, ஏ. எஸ். ராகவன் ஆகியவர்கள் வளரும் எழுத்தாளர்களுக்குப் பெரிதும் பயன்படும்படியான அறிவுரை கூறினார்கள். இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் சென்ற 16-2-58 ஞாயிறன்று ஒரு பேரவைக் கூட்டம் மூர்த்தி ட்யுடோரியல் கல்லூரி ஹாலில் நடைபெற்றது.

இதில் கலந்து கொள்வதற்காக சேலம், தஞ்சை, புதுக்கோட்டை, மதுரை ஆகிய பல இடங்களிலிருந்து சுமார் நாற்பது எழுத்தாளர்கள் திருச்சிக்கு வந்திருந்தனர்; எல்லோரும் மாணவ இளைஞர்கள்; கண்ணன் நேயர்களுக்கு நன்கு அறிமுகமான எழுத்தாளர்கள்.

வளரும் எழுத்தாளர் சங்கத் துணைத்தலைவர் திரு. தே. பார்த்தசாரதி பேரவைக்குத் தலைமை தாங்கினார். செயலாளர் திரு. அமலன் (மேரியண்ணா) வெளியூர்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளை அவைக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

[3-ஆம் அட்டை பார்க்க

மலர் 9 இதழ் 6

15—3—1958

# குழந்தைகளே!

எழுத்தாளர் அறிமுகப் பகுதிக்கு நல்ல வரவேற்பு இருப்பதை அறிந்து மகிழ்ச்சியுறுகிறேன். முதல் இதழைப் பார்த்த பிறகு, மேலும் பலர் புகைப்படமும் குறிப்புக்களும் அனுப்பியிருக்கிறார்கள். பலர் தங்கள் பாராட்டைத் தெரிவித்திருக்கிறார்கள். இதிலிருந்தெல்லாம் உங்களுடைய ஆர்வம் நன்றாகத் தெரிகிறது.

தொடர்கதைகள் இரண்டும் உங்களுடைய பாராட்டைப் பெற்றிருப்பதையும் அறிந்துகொண்டேன். என் மகிழ்ச்சி இருமடங்காகிவிட்டது. அவ்வப்போது கண்ணனில் புதிய புதிய பரீட்சைகள் செய்து கொண்டுதான் வருகிறோம். அவ்வளவும் உங்களுக்கு ஏதாவது ஒருவிதத்தில் பயனளிப்பதாக இருந்தால் அதுவே எங்களுக்குத் திருப்தியைத் தரும்.

சித்திரைப் புத்தாண்டு முதல் கண்ணன் மேலட்டைப் படத்தையும் முன்மாதிரி மாற்ற எண்ணியுள்ளோம். அது உங்களுக்கு ஏற்றதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த இதழிலிருந்து பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான கதைகள், பாடல்கள், வேடிக்கைகள் எல்லாம் தனியாக வெளியிட எண்ணினோம். 'பூவண்ணன்' இந்த வயதுக் குழந்தைகளுக்காக ஒரு கதை எழுதியிருக்கிறார். இதை நீங்களும் படிக்கலாம்; உங்கள் தம்பி தங்கைகளும் படித்து மகிழலாம்.

இந்த வயதுக்குள்ள குழந்தைகளுக்குக் கதைகள், பாடல்களை எழுத்தாளர்கள் எழுதியனுப்பலாம்.

—ஆசிரியர்.



## எஸ். பி. அமலன்

திருச்சியைச் சேர்ந்த இவர் 'மேரியண்ணா' என்ற புனைபெயரில் குழந்தைக் கதைகள் பல எழுதி அவர்களின் பாராட்டைப் பெற்றுள்ளார். 'மலர்மகன்' என்ற பெயரில் கவிதைகள் பலவும் 'கிக்கி' என்ற பெயரில் வேடிக்கைக் கதைகள் பலவும் எழுதியிருக்கிறார். திருச்சி அம்பிகா உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டே எழுத்துத் துறையிலும் ஊக்கத்துடன் முன்னேற்றம் அடைந்து வருகிறார். குழந்தை இலக்கிய வளர்ச்சியை முக்கிய நோக்காகக் கொண்டவர். கண்ணன், கலைமகள், கல்கண்டு, தினத்தந்தி, வீரகேசரி, மற்றும் பூங்கொத்து, பூஞ்சோலை போன்ற பத்திரிகைகளில் சுமார் நூற்று ஐம்பதுக்கு அதிகமாக இவருடைய சிறுகதைகளும், கவிதைகளும் நாடகங்களும் வெளியாகியுள்ளன. இத்துடன் திருச்சி வளரும் எழுத்தாளர் சங்க மத்தியக் குழுவின் காரியதரிசியாக இருந்துகொண்டு எழுத்தாளர் நலனுக்காகப் பெரிதும் பாடுபடுகிறார்;

கதைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே!

அட்டைப் படம்:

புகைப்படம்

புஷ்பத்துறை சுப்பிரமணியம்

# ஆட்டுக் குட்டியே

எ. ந. கணபதி

துள்ளித்துள்ளி ஓடிவரும்
ஆட்டுக் குட்டியே - நீ
துட்டத்தனம் செய்திடாதே
ஆட்டுக் குட்டியே!

துள்ளித்துள்ளி ஓடிடாதே
ஆட்டுக் குட்டியே - நீ
தனிமையாகச் சென்றிடாதே
ஆட்டுக் குட்டியே!

துட்டஓநாய் கண்டுவிட்டால்
ஆட்டுக் குட்டியே - உன்னைத்
தூக்கிக்கொண்டு ஓடிவிடும்
ஆட்டுக் குட்டியே!

திட்டமாகச் சொல்லுகிறேன்
ஆட்டுக் குட்டியே - உன்னைத்
தின்றுதீர்க்கக் கொன்றுவிடும்
ஆட்டுக் குட்டியே!

அம்மாவைநீ அழைப்பதேனே
ஆட்டுக் குட்டியே - பசி
அடிவயிற்றில் தோன்றியதா
ஆட்டுக் குட்டியே?

சும்மாகொஞ்சம் புல்லைத்தின் பாய்
ஆட்டுக் குட்டியே - அம்மா
சீக்கிரத்தில் வந்திடுவாள்
ஆட்டுக் குட்டியே!

அந்திநேரம் மந்தைஆட்டில்
ஆட்டுக் குட்டியே - தாயை
அடையாளம் காண்பதுதான்
ஆட்டுக் குட்டியே!

விந்தையாக இருக்கிறது
ஆட்டுக் குட்டியே - அந்த
வித்தையைநீ கற்றதெங்கே
ஆட்டுக் குட்டியே?





# காளிகோட்டை ரகசியம்

‘ஜனா’

## 7. வெளியே தலை நீட்டாதே!

குதிரைமீது இருந்த வீரன் காளிகோட்டை காவல் படையைச் சேர்ந்தவனாகத் தோன்றியது. வேங்கை இலச்சினை பொறித்த அவனுடைய முதுகுப்புற ஆடை அந்த வெயிலில் நன்றாகத் தெரிந்தது. நெடுமாறன் வியப்புற்றான். அந்த வீரன் எப்படித் தங்களைப் பின்பற்றி வந்தான் என்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆனால் அடுத்த கணமே, என்ன செய்யவேண்டும் என்கிற யோசனை உண்டாயிற்று. இளமாறனை அருகில் அழைத்து, ‘‘நீ குடிசையினுள்ளே கொஞ்சம் மறைவாக இரு!’’ என்று கூறியனுப்பினான். குடிசை வாயிலிலே மாட்டியிருந்த வில்லைத் தோளிலே மாட்டிக்கொண்டான். நாலைந்து கூரிய அம்புகளை இடையிலே செருகிக்கொண்டான். பிறகு ஒன்றுமே அறியாதவனைப் போல, செங்கணன் தோளைப் பற்றியவாறு ஏரியை நோக்கிச் சென்றான்.

இப்போது வீரன் இருகையாலும் நீரைச் சேந்திக் குடித்துவிட்டு, மெதுவாக ஒரு கையில் குதிரை லகானையும் மற்றொரு கையில் ஈட்டியையும் பிடித்தவாறு கரையேறி வந்துகொண்டிருந்தான். எதிரே வந்த இளைஞர்களுடைய தோற்றம் அவன் கவனத்தைக் கவர்ந்தது. தன்னைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் அலட்சியமாய் வந்துகொண்டிருந்தவர்களைப் பார்த்துக்கொண்டு நின்றான். செங்கணன் திரும்பினான். அவன் கையிலிருந்த ஈட்டியைப் பார்த்து நகைத்தவாறு, ‘‘ஐயாடி, இவ்வளவு நீள ஈட்டி எதற்கு? அணில் குத்துவதற்கா?’’ என்று கேலியாகக் கேட்டுவிட்டு, ஆவென்று வாயைப் பிளந்துகொண்டு வியப்புற்றவன் போல் நின்றான்; குறும்புக்காரன்!

செங்கணனுக்கு யாரையும் முன்பின் தெரியவேண்டிய அவசியமில்லை. அவன் எவ்வளவு பெரியவனாக இருந்தாலும், சிறியவனாக இருந்தாலும் அவனுக்குக் கவலையில்லை. பயமோ, கோழைத்தனமோ அவனுக்குச் சிறிதும் கிடையாது. குறு குறு வென்று அவன் பார்வையிலே நெளிந்த சுட்டித்தனத்தைக் கண்ட அந்த வீரனும், ''ஆமாம், தம்பி; ஆமாம். சரியாகச் சொன்னாய்! உன்னைப் போன்ற அணிற் பிள்ளைகள் வாலையாட்டினால் உடனே இப்படிக் குத்துவதற்குத்தான் இந்த ஈட்டி!'' என்று கூறியவாறே, கையிலிருந்த ஈட்டியால் குத்துவதுபோல் பாசாங்குசெய்து காட்டினான்.



இதைக் கண்ட செங்கணன் ஈட்டியை இடது கையால் தட்டி விட்டு, ''அணிற் பிள்ளையைக் குத்த வா ஆள் உயர ஈட்டி?" என்று கூறிச் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறாய்?''

''சிரிக்காமல் பின்னே அழவா சொல்கிறீர்கள் என்னை? இந்த அணிற் பிள்ளைகளுக்கு வால் இல்லை ஆட்டுவதற்கு! ஆனால் இதோ பார்த்தீர்களா, கூரிய வேல் இருக்கிறது! இது ஆறடித் தூரம் இல்லை. நூறடித் தூரம் ஆனாலும் குறி தப்பாமல் வந்து தைக்கும்?'' என்று நெஞ்சைப் புடைத்துக்கொண்டு நெடுமாறன் தோளில் தொங்கிய வில்லைத் தன் கை அம்பினால் தட்டிக் காண்பித்தான்.

இவர்களுடைய உரையாடலில் கலந்து கொள்ள விரும்பாதவன் போல் தோன்றிய நெடுமாறன் அந்த வீரனைக் கடைக்கண்ணால் ஒருமுறை உன்னிப்பாக ஆராய்ந்தான். அவன் தங்களைத் தொடர்ந்து வந்தவனாகத் தோன்றவில்லை. முதல் நாள் காட்டில் வேங்கையாரோடு இருந்தவனாகவும் தெரியவில்லை. ஆகவே இவனிடம் பேச்சுக் கொடுத்து, இவன் வந்த காரியத்தைத் தெரிந்துகொள்வதே புத்திசாலித்தனமாகத் தோன்றியது.

அதனால் அவன் உடனே செங்கணன் பக்கம் கோபம் கொண்டவன் போல் திரும்பி, ''என்னடா இது, ஒரே யடியாக ஓட்டுகிறாய்? யாரோ, பாவம்! புதிதாக வந்தவர்களிடம் இதென்னடா உனக்கு வீண் வம்பு?'' என்று அதட்டினான்.

''ஓகோகோ? இவரா புதிது? இவர் முதுகைப் பார்த்தாயா, அண்ணா? இதெல்லாம் அவருடைய ஊர். அப்படிப் பார்க்கப்

போனுல்....'' என்று செங்கணன் கூறிக்கொண் டிருக்கும் போதே, நெடுமாறன் அவன் முதுகை அப்போதுதான் கவனிப்ப வன் போல் பார்த்தான். ''ஓ...'' என்று அவன் வாய் வியப் பொலி கூட்டியது.

''அப்படிப் பார்க்கப்போனுல் என்ன?'' என்று செங்கண ஹனத் தொடர்ந்து கேட்டான் வீரன்.

நெடுமாறன் சட்டென இடைமறித்து, ''இல்லே; நீங்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்தான். ஆனுல் வடக்கே யிருந்து திரண்டு எழுந்து வருகிறதே ஒரு படை, அதைச் சேர்ந்தவரல்ல என்று சொல்கிருன்'' என்ருன்.

''படையா, எங்கிருந்து? எப்போது?'' என்று உடனே குதிரைமீது தாவி ஏறினுன் அந்த வீரன்.

''அதோ, அந்தக் குன்றின்மீது ஏறிப் பார்த்தால் தெரியும். காட்டு நாகர் படை கடல் வெள்ளம் பொங்கி வருவதுபோல் வருகிறது!'' என்ருன்.

''அப்படியா? அதற்குள் வந்துவிட்டார்களா?'' என்று ஆச்சரியக் குறியோடு வினவினுன் அந்த வீரன்.

''அப்பொழுது நாகர் படை வருவது உங்களுக்கு முன்ன மேயே தெரியுமா? அதற்காகத்தான் இந்தப் பக்கம் வந்திருக்கிறீர் களா?'' என்று கேட்டான் நெடுமாறன்.



"எங்கே, கொஞ்சம் அந்தக் குன்றுக்குச் செல்லும் சரியான பாதையைக் காட்டுங்கள், பார்க்கலாம்!" என்று அவசரப்பட்டான் வீரன்.

காட்டு நாகர் படை காளிகோட்டையை நோக்கி வருவதை முன்னிட்டே அந்த வீரன் வந்திருந்தான் என்பது தெரிந்தது. படையின் பலம், அளவு முதலிய முக்கியமான விவரங்களைத் தெரிந்துகொண்டு போவதற்காகவே அவன் வந்திருக்கிறான். ஆகவே அவன் வேங்கையாரின் ஒற்றர் படையைச் சேர்ந்தவன் என்பது நெடுமாறனுக்குத் தெரிந்தது. ஒற்றர் படை வீரர்களிடம் முன்னெச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்று அவன் எண்ணினான்.

அதற்கு ஏற்றாற்போல அந்த ஒற்றன் விளையாட்டாகப் பேசிக்கொண்டே அந்தக் குடிசையைச் சுற்றிலும் நன்றாகக் கவனித்தான். குடிசையின் வாயிலை அடைந்ததும் அவன் கண்கள் ஒரு கணம் விரிந்து நின்றன. அதற்குள் செங்கணன், "ஐயா, ஆறடி ஈட்டி வீரரே, இந்தக் குடிசைமீது கண் போட்டு விடாதீர்கள். காட்டு நாகர் படை வருவதைக் காட்டுகிறேன். வாருங்கள், குன்றின்மீது ஏறிப் பார்ப்போம்" என்றான்.

அந்த ஒற்றன் செங்கணனைப் பின்பற்றிச் சென்றபோது அந்தக் குடிசையைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனான். ஆயினும் குடிசைக்குள்ளிருந்த இளமாறனை அந்த வீரன் கவனிக்கவில்லை.

நெடுமாறனுக்கு நல்ல பசி. முதல் நாள் மாலை சாப்பிட்டது. அவனும் இளமாறனும் இரவெல்லாம் ஒன்றுமே சாப்பிடவில்லை. அதனால் குன்றுக்குப் போனவர்கள் வருவதற்குள் குடிசைக்குள்ளே போய், சாப்பிட ஏதாவது இருக்கிறதா என்று பார்க்க எண்ணினான். உள்ளே இளமாறன் வேக வைத்த பனம் கிழங்குகளைக் கடித்துத் தின்றுகொண் டிருந்தான். ஓலைப் பெட்டியில் தினைமாவும் மற்றொரு சட்டியில் மலைத்தேனும் அவன் பக்கத்திலே இருந்தன. நெடுமாறன் சிரித்துக்கொண்டே, "எனக்கு ஏதாவது மீதி வைத்திருக்கிறாயா, இல்லையா?" என்று கேட்டுவிட்டு, அவன் பக்கத்தில் உட்கார்ந்தான். அடுத்த கால் நாழிகை அவர்கள் உணவு கொள்வதில் தீவிரமாக முனைந்தார்கள்.

"நீ அந்த ஒற்றன் கண்களில் படாமல் இருப்பதே நல்லது. அவன் இந்த இடத்தைவிட்டுப் போகிறவரையில் வெளியில் தலை காட்டாமல் இரு!" என்று சொல்லிவிட்டு, அவன் வெளியில் வந்து நின்றான்.

குன்றிலிருந்து அந்த ஒற்றன் குதிரையோடு இறங்கிவருவது தெரிந்தது. அடிவாரத்தை அடைந்ததும் அவன் குதிரைமீது பாய்ந்து ஏறி, ஒரு நொடியும் தாமதிக்காமல், காளிகோட்டை செல்லும் பாதையிலே விரைந்து சென்றான். வாசலில் நின்ற நெடுமாறனைக்கூட அவன் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

## 8. வேங்கையார் சீற்றம்

காளிகோட்டையின் வாயில்களிலும் கொத்தளங்களிலும் வீரர்கள் ஆயுதபாணிகளாக நின்றார்கள். வில், வேல், கம்பு,

ஈட்டி, வாள், கேடயங்கள் எல்லாம் அணிந்த வீரர்கள் வரிசை வரிசையாக அணிவகுத்துக்கொண் டிருந்தார்கள். இது ஒருபுறம் நடைபெற்றுக்கொண் டிருக்க, மறுபுறத்தில் காளிகோட்டையின் ஆசார வாயில்களிலும், மற்றப் பகுதிகளிலும் விசேஷமான அலங்காரங்களும் வரவேற்பு ஏற்பாடுகளும் நடைபெற்றுவந்தன. இதையெல்லாம் பார்க்கும்போது அந்நியர் படை போர் செய்யும் நோக்கத்தோடு வருவதாகச் சொல்ல முடியவில்லை. எதற்கும் படைகள் எச்சரிக்கையாகவே வைக்கப்பட்டிருந்தன.

வேங்கையார் கூண்டில் அடைபட்ட சிங்கம்போல் தம்முடைய இருக்கை மண்டபத்திலே குறுக்கும் நெடுக்குமாக உலவிக்கொண்டிருந்தார். முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடித்தன. சிவந்த கண்களும், அடர்ந்த மீசையுமாக உறுமிக்கொண் டிருந்த அவரைப் பார்க்கவே நடுக்கமாக இருந்தது. பிறகு கைகளைக் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்த அவர் நின்று, ''ஓகோ! அவ்வளவு தூரத்துக்கு ஆகிவிட்டதா?'' என்று அந்த மண்டபம் அதிரக் கூச்சல் போட்டார். எதிரே ஏரி கரையில் வேவு பார்க்க வந்திருந்த ஒற்றன் பணிவுள்ள நாய்போல் உடலைக் குழைத்துக்கொண்டு, வாய்பொத்தி நின்றான்.

''என்னடா நிற்கிறாய், மடப்பயலே!'' என்று சம்பந்தமில்லாமல் பயங்கரமாக மிரட்டினார் வேங்கையார்.

''சித்தம் மகாராசா!'' என்று அந்த ஒற்றன் மேலும் ஒடுங்கியவாறு நின்றான்.

''அது அந்தப் பூசாரிப் பயல் வண்டிதான் என்று நிச்சயமாகத் தெரியுமா, உனக்கு?''

''நிச்சயமாகத் தெரியாததை மகாராசாவுக்கு முன்னால் வந்து இந்த நாய் சொல்லுமா, மகாராசா?''

''அடேய்!''

''ஆக்கினை மகாராசா!''

''என்னடா, என்னையே திருப்பிக் கேட்கிறாய்?''

அந்த ஒற்றன் அர்த்தமில்லாத இந்த மிரட்டலுக்கு விடை கூறாமல் பணிவோடு நின்றான்.

''அந்தக் குடிசையில் இரண்டு பயல்களா இருந்தார்கள்?''

''அப்படித்தான் மகாராசா!''

''ஒருவன் ஆள் வாட்டசாட்டமாக வீரன் சிலை மாதிரி..''

''அப்படியேதான் மகாராசா!''

''மற்றவன் பத்து வயதுள்ள பொடியன்தானே?''

''இல்லை மகாராசா! பதினேழு பதினெட்டு வயசு இருக்கும் மகாராசா!''

''என்னடா இல்லை? பத்துப் பன்னிரண்டு வயசுப் பொடியனடா அவன்! நான் சொல்கிறேன். மறுத்துச் சொல்கிறாயா?''

''மறுக்கவில்லை மகாராசா! பூனைக் கண்; மாநிறம்; சுருட்டைச் சடை..''

வேங்கையார் சள்ளென்று சீறி விழுந்தார். "நிறுத்தடா, உன் உளறலை! பத்துப் பன்னிரண்டு வயது. கறுத்த விழிகள். அழகு நிறம். நான் பார்க்காமலே சொல்கிறேன். நீ பார்த்து விட்டு வந்து உளறுகிறாயா? சரியா, இல்லையா? சொல்லு!" என்று இரண்டு அடி முன்னால் எடுத்து வைத்தார் வேங்கையார். அவருடைய வலக்கரத்தில் இருந்த சாட்டை இப்போது கருநாகம் நாக்கை நீட்டுவதுபோல் தொங்கியது. அந்தக் கொடிய நாக்குகள் தன் சதையைப் பிய்த்து ருசி பார்த்துவிடும் என்ற நடுக்கம் அந்த ஒற்றனுக்கு உண்டாகிவிட்டது. வேங்கையார் தவறாக வேறு யாரையோ பார்த்துவிட்டுச் சொல்கிறார் என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது. ஆயினும் அந்தச் சாட்டையடிகளுக்குப் பயந்து, "ஆமாம், ஆமாம், மகாராசா! அப்படித்தான்!" என்று பரிதாபமாய்க் கைகளைத் தூக்கிக்கொண்டு கெஞ்சினான்.

"சொடேர்!" என்று சாட்டையின் சொடுக்குச் சத்தம் கேட்டது. அடுத்த கணம் சாட்டை அவனைப் பிரிபோல் சுற்றிக் கொண்டிருந்தது.

"ஏனடா மடையா! ஒற்றன் வேலையா பார்க்கிறாய் நீ? பூசாரி வண்டி கிடப்பதைப் பார்த்தாய். அந்தப் பயல்கள் இருவரையும் பார்த்துப் பேசியும் இருக்கிறாய். அவர்களைச் சும்மாவா விட்டுவிட்டு வந்தாய்? இரண்டு பேரையும் வரிந்து கட்டி இங்கே இழுத்து வருவதற்கென்ன?" என்று மேலும் இரண்டு மூன்று முறை சாட்டையால் உரத்துத் தீட்டினார்.

உயிர் போகும் வலியைப் பொறுத்துக்கொண்டு ஒற்றன் தரையிலே விழுந்தான். உடனே சமாளித்துக்கொண்டு எழுந்தான்.

வேங்கையார் தம் கை நோக, சிறிது நேரம் நின்றார். ஒற்றன் உடலிலே வரிவரியாகத் தடிப்பு ஏறியதைக் கண்டவுடனே அவர் சினம் சற்றுத் தணிந்தது,

"இன்று முதல் அந்தப் பூசாரிப் பயலைக் கண்காணிக்க வேண்டும். என்ன?" என்று மிடுக்காகக் கேட்டார்.

"ஆக்கினை மகாராசா!"

"அது எப்படிச் செய்வாயோ, எனக்குத் தெரியாது. எனக்கு உடனுக்குடன் அவர்கள் நடமாட்டம் தெரிய வேண்டும். நாகர் படையை வரவேற்பதில் நான் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருப்பேன். என்னைத் தனியாகப் பார்க்க முடியாமலும் இருக்கும். சரியான சமயத்தில் அந்தப் பயல்களைக் கைப்பிடியாகப் பிடித்து, கொட்டடியில் அடைத்துவிட வேண்டும். ஆனால் இது வெளியிலே யாருக்கும் தெரியக்கூடாது. நினைவிருக்குமா?"

"இருக்கும், மகாராசா!"

இதற்குள் வேறு ஒரு காவற்காரன் ஓடி வந்து வேங்கையாருக்கு மண்டியிட்டு வணங்கி நின்றான்.

(தொடரும்)



# புலிக்குப் பிறந்தது..!

ம. பாலசுப்பிரமணியன்

''டேய்!''

திடுக்கிட்டுத் திரும்பினான் ரிக்ஷாக்கார மாரி. எதிரே கண்களில் கறுப்புக்கண்ணாடியும், தலையில் மேல்நாட்டு நாகரிகத் தொப்பியும், இடையில் முழுக் கால்சட்டையும் போட்டுக்கொண்டு கால்களில் புத்தம் புதிய ஷூக்கள் இரண்டு 'பளபள'வென்று டாலடிக்க, உதட்டிலிருந்த சிக்ரெட்டை உதறித் தள்ளிவிட்டு வாயினின்றும் புகையை அநாயாசமாகப் பறக்கவிட்டுக்கொண்டிருந்தான் ஒரு பகட்டான வாலிபன்.

தன்னைக் கூப்பிட்டவன் அந்த வாலிபனாய்த்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்த ரிக்ஷாக்கார மாரி வழக்கமான தொனியில், ''ஏஞ்சார்! வண்டி வேணுங்களா?'' என்றான் பல்லைக் காட்டிக்கொண்டே.

''ஆமாண்டா! சைனாபஜார் போகணும். எவ்வளவு கேட்கிறே?'' என்றான் அந்த வாலிபன். அப்போது அவர்கள் இருந்த இடம் 'பஸ்ட் லைன் பீச்' கஸ்டம்ஸ் ஹவுஸுக்கு எதிரில்.

''ஆறணா குடு சார்!'' இதைச் சொல்வதற்குள் மாரியின் எண்சாண் உடம்பும் ஒரு சாணாய்க் குறுகி நின்றது.

''நாலணாதான். அதுக்கு மேலே ஒரு காலணாக் கிடையாது!'' என்று மிடுக்குடன் கூறிக்கொண்டே மாரியின் பதிலுக்குக் கூடக் காத்திராமல் வண்டியில் ஏறி உட்கார்ந்தான் அந்த வாலிபன். மாரி அவனை ஏற இறங்க ஒருமுறை பார்த்தான். பார்வைக்கு அந்த வாலிபன் பணக்காரனாய்த் தோற்றமளித்தாலும் அவன் குணமும் நடத்தையும் அவனை ஏ—ஒன் பரதேசிப் பயலாகவே காட்டியது மாரியின் புத்திக்கு. ''ஹூம்'' என்ற பெருமூச்சோடு வண்டியை இழுக்கத் தொடங்கினான் மாரி.

''டேய்!''

திடுக்கிட்டுத் திரும்பினான் மாரி.

''டாப் போடுடா!''

மாரி ஒரு கணம் அதிசயத்தோடு அந்த வாலிபனைப் பார்த்துவிட்டு, பிறகு 'டாப்'பைப் போட்டான். மாலை சுமார் ஆறு மணியிருக்கும். தெரு விளக்குகள்கூட இன்னும் ஏற்றப்படவில்லை. எங்கும் லேசாக இருட்டு பரவிக் கிடந்தது. பெண்பிள்ளைகள்கூட 'டாப்' வேண்டாம் என்று சொல்லுகிற இக்

காலத்தில், ''இவன் ஏன் டாப் போடச் சொல்கிறுன்?'' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான் ரிக்ஷாக்கார மாரி. ஆனுல் அந்தக் கேள்விக்கு ஏற்ற பதில் அந்தப் பட்டிக்காட்டு மண்டையில் உதயமாகவே இல்லை. அவன் பாட்டுக்கு மாட்டைப் போல் ஓடிக் கொண்டே இருந்தான்.

அந்த வாலிபன்—

மெதுவாக எழுந்தான். சுற்று முற்றும் பார்த்தான். வண்டி அப்பொழுது 'பஸ்ட் லைன் பீச்' வழியாக ஜி. பி. ஓ வைத் தாண்டி 'பாரீஸ் கார்ன'ருக்குச் சென்று கொண்டிருந்தது. ஆள் நடமாட்டத்தை அதிகமாய்க் காணும்.

பிறகு—

மொதுவாக - ஆனுல் மிகவும் ஜாக்கிரதையாகத் தான் உட்காருவதற்காகப் போடப்பட்டிருந்த தலையணையை எடுத்தான். அதற்கப்புறம் பெட்டியைத் திறந்தான். அதுதான் - ஒவ்வொரு ரிக்ஷாவிலும் இருக்குமே கல்லாப் பெட்டி அதை. அதனுள் கையை விட்டான். காகிதம் ஒன்று கசங்கியது. எடுத்துப் பார்த்தான். பச்சை நோட்டு. அவன் முகம் மலர்ந்தது. அப்படியே கால் சட்டைப் பைக்குள் அதைத் திணித்துக் கொண்டான். பிறகு ஜி. பி. ஓ. வை ஓரக்கண்ணுல் ஒரு தடவை பார்த்துவிட்டு, பழையபடி உட்கார்ந்து கொண்டான்.

ஆனுல்—

இதையெல்லாம் ஜெனரல் போஸ்ட் ஆபீஸின் (ஜி. பி. ஓ.) வாசலில் ஓர் இருண்ட மூலையில் ஏதோ காரியமாக எதேச்சையாக வந்து நின்றுகொண்டிருந்த இன்ஸ்பெக்டர் இருதயநாதன் கவனிக்கத் தவறவில்லை. ஒரே நொடியில் அவருக்கு விஷயம் விளங்கிவிட்டது.

உடனே சற்று இடைவெளி விட்டு இன்ஸ்பெக்டரும் கவனிக்காதவர் போல் அந்த ரிக்ஷாவைத் தொடர்ந்து தம் சைக்கிளில் வந்து கொண்டே யிருந்தார்.

அப்பாவி மாரியோ இதையெல்லாம் கவனிக்காமல் நாலணுக் கூலிக்காக நாய்போல் ஓடிக் கொண்டே இருந்தான்.

வண்டி பாரிஸ் கார்னரைக் கடந்து, 'அப்பா அண் கோ'வுக்கு அருகில் வந்துகொண்டிருந்தது.

''டேய்!'' என்று குரல் கொடுத்தான் அந்தக் கறுப்புக் கண்ணுடி வாலிபன்.

மாரி திரும்பினுன். திடுக்கிட்டு அல்ல, சாதாரணமாகத்தான்.

''வண்டியை நிறுத்து!''

வண்டியைக் கீழே வைத்து விட்டு வழிவிட்டு ஒதுங்கி நின்றுன் மாரி.

அந்த வாலிபன்—

கீழே இறங்கியதும் ரிக்ஷாக்கார மாரியின் கையில் எட்டணுவைத் திணித்துவிட்டு அவன் பதிலுக்குக் கூடக் காத்திராமல் கூட்டத்தினுள் புகுந்து மறைந்தான்.

பின்னுலேயே சைக்கிளில் வந்த இன்ஸ்பெக்டர் ஓர் ஓரத்தில் சைக்கிளை நிறுத்திப் பூட்டிவிட்டு அவனைப் பின்தொடர்ந்தார் - பிடிப்பதற்காக.

ஆனுல் மலையபெருமாள் தெருவரையில்தான் அவன் தென்பட்டான். அதற்கப்புறம் அவனைக் காணவில்லை. எப்படியோ கூட்டத்தினுள் புகுந்து மறைந்து விட்டான். மூன்று முறை மலைய பெருமாள் தெருவை வலம் வந்த பிறகு தன் முட்டாள் தனத்திற்காகத் தலையிலடித்துக் கொண்டார் இன்ஸ்பெக்டர் இருதயநாத். அப்போதே அவனைக் கையும் களவுமாய்ப் பிடிக்காமல் விட்டோமே என்று எண்ணினுர்.

ஆனுல்—

ரிக்ஷாக்கார மாரிக்கு இதெல்லாம் ஒன்றுமே தெரியாது. அவன் பாட்டுக்குக் கையிலிருந்த அந்த முழு எட்டணு நாணயத்தையே வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ரிக்ஷா இழுக்க ஆரம்பித்து இன்ருேடு கிட்டத் தட்ட ஐந்து வருஷங்களாகின்றன. ஆனுல் இது போன்ற ஒரு 'சவாரியை - நாலணுதான் தருவேன்' என்று சொல்லிவிட்டு எட்டணு தரும் சவாரியை அவன் கண்டதே இல்லை. ஆகவே உள்ளத்தில் உவகை பொங்க, மகிழ்

வோடு அந்தக் காசைப் பெட்டியி னுள் வைப்பதற்காகப் பெட்டி யைத் திறந்து எட்டிப் பார்த்தான். எட்டிப் பார்த்தவுடன் தேள் கொட்டியவனைப் போன்று வீரிட்டு அலறினான்.

உள்ளே—

பெட்டி காலியாயிருந்தது. காலையிலிருந்து மாலை வரையில் எலும்புகள் முறிய, வியர்வை வழிய, கால்கள் கெஞ்ச, மூச்சு முட்டக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணம் நாலே முக்கால் ரூபாய் சில்லறையாக இருந்தால் செலவாகி விடுமே என்ற காரணத்தால் தன் நண்பன் ரிக்ஷாக்கார ரங்கனிடம் நாலணா கடன் வாங்கி, அந்த ஐந்து ரூபாய்ச் சில்லறையையும் ஒரு முழு நோட்டாக மாற்றிப் பத்திரமாகப் பூட்டாமல் - பெட்டியினுள் வைத் திருந்தான். அந்தப் பணம் இப் போது இல்லையென்றதும் அவன் உடம்பில் உயிரே இல்லாதது போல் தோன்றியது.

எனவே நாலணாக் கூலிக்கு எட்டணாவாகக் கொடுத்த அந்த நயவஞ்சகன் மேல் மாரிக்குச் சந் தேகம் தட்டியதில் வியப்பில்லை.

மாரியின் கண்கள் கோபத்தால் சிவந்தன. கோபம் கொந்தளிக் கும் அந்தக் கண்களோடு மாரி அந்த ஆசாமியை வால்டாக்ஸ் ரோடு முனையிலிருந்து பாரிஸ் கார்னர் வரையில் சல்லடை போட் டுச் சலித்து விட்டான். ஒன்றும் பலனில்லை. கால்கள் இரண்டும் ஓய்வுக்காகக் கெஞ்சினதுதான் மிச்சம்

அதன் பிறகு சோர்வுடன் ரிக்ஷாவில் அமர்ந்தவன் அப்படியே அயர்ந்து விட்டான்.

இன்ஸ்பெக்டர் இருதயநாத் துக்கோ ஒரு சிறிய கேஸில் இப்படி அக்கறை குறைவாக நடந்து கொண்டது மனத்தை அறுத்தது. எனவே நிம்மதிக்காகக்



கொத்தவால் சாவடியினுள் நுழைந்தார். அங்கே மாங்காய்க் கடை மன்னார்சாமி இவருக்குப் பரிசயம். பொழுது போகவில்லை என்றால் இன்ஸ்பெக்டர் மன்னார் சாமியின் கடைக்குவந்து விடுவார். இருவரும் வம்பளப்பில் கெட்டிக் காரர்கள்.

இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் மன்னார்சாமிக்கு வாயெல்லாம் பல்லாகி விட்டது, ''வாங்க. வாங்க!'' என்று வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு காவிப் பற்களைக் காட்டி, கலங்கா மல் சிரித்தார் மன்னார்சாமி.

இருவரும் பேசிக்கொண்டே இருந்தார்கள். அப்போது—

ரிக்ஷாக்காரனின் பணத்தை அபேஸ் செய்த 'சூட்' போட்ட வாலிபன், ஏதோ சில சாமான் களை வாங்கிக்கொண்டு அவ்வழி யாகச் சென்றான். இன்ஸ்பெக் டருக்கு இருப்புக்கொள்ளவில்லை.

''மன்னாரு!'' என்று கத்தி, பற்களை நற நறவென்று கடித்தார்.

மன்னார்சாமிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ''என்ன!'' என்றார் பதறிப் போய்.

''இரு; வருகிறேன்'' என்று சொல்லி விட்டு. விடுவிடென்று நடந்து அவனை நெருங்கினார்.

அந்த வாலிபனின் பிடரியிலே இரண்டு அறை கொடுத்து, சிண் டைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் ஸ்டேஷனிலே நிறுத்தி விசாரிக்க வேண்டும் என்றுதான் முதலில் நினைத்தார் இன்ஸ் பெக்டர்.

ஆனால் அவன் அருகில் சென்ற தும் அது அவருக்குச் சரியான யோசனையாகப் படவில்லை. அவனை மட்டுமன்றி அவனோடு சேர்ந்த மற்றவரையும் பிடிக்க வேண்டும் என்ற அவா அவரை உந்தித் தள்ளவே, பேசாமல் முன்னிலும் பன்மடங்கு ஜாக்கிரதையுடன் கண்ணிமைபோல் அவனைப் பின் தொடர்ந்தார்.

அந்தப் பொல்லாத வாலிபனோ இன்ஸ்பெக்டர் தன்னைத் தொடரு கிறார் என்பதை எப்படியோ தெரிந்துகொண்டான். இனி மீண் டும் இன்ஸ்பெக்டருக்குப் போக்குக் காட்டி ஓடுவதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல என்பதை யும் ஊகித்து அறிந்துகொண் டான். அவன் பாட்டுக்கு நடந்து கொண்டே இருந்தான்.

அதே வேகத்துடன் நிதானமாக நடந்து ஒரு பூட்டுக் கடையருகில் நின்றான். அங்கிருந்த பலரகப் பூட்டுக்களில் கொஞ்சம் சிறிதாக இருந்த 'வில்' பூட்டு ஒன்றை விலை கொடுத்து வாங்கிக்கொண்டான்.

பிறகு விடுவிடென்று சைனா பஜாரை நோக்கி நடக்கத் தொடங் கினான்.

இன்ஸ்பெக்டருக்கு அவன் போக்குப் புரியவில்லை. ஆனாலும் விடாமல் தொடர்ந்துகொண்டே இருந்தார்

என்ன ஆச்சரியம்!

அந்த வாலிபன் பழையபடி நேரே ரிக்ஷாக்கார மாரியின் எதிரில் வந்து நின்றான்.

மாரியோ கண்களிரண்டையும் மூடிக்கொண்டு நெற்றியைச் சுருக்கி, பலமான சிந்தனையில் ஈடு பட்டிருந்தான்.

இன்ஸ்பெக்டரைக் கடைக் கண்ணால் கவனித்துக்கொண்டே பழையபடி, ''டேய்!'' என்று குரல் கொடுத்தான் அவ்வாலிபன். வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்த மாரி எதிரே நின்ற வாலிபனைப் பார்த்ததும் குபீரென்று அவன் மீது பாய்ந்து தாக்க நினைத்தான். ஆனால் பக்கத்திலேயே நிற்கும் இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் இருப்புக்கொள்ளாமல் தவித்தான்.

இதற்குள்—

அந்த வாலிபன். தன் கால் சட்டைப் பையில் கையைவிட்டு ஐந்து ரூபாய் நோட்டை எடுத் தான்.

அது—

அவன் முன்பு திருடிய அதே நோட்டு, அதோடு 'வில்' பூட்டை யும் நீட்டிக்கொண்டே மாரியிடம் சொன்னான்:

''இனிமேல் இப்படிப் பைத்தி யக்காரத்தனமாய் பெட்டியில்

பணத்தை வைத்துவிட்டுப் பெட்டியையும் திறந்து வைக்காதே. இந்தா பூட்டு! இதைப் போட்டு அந்தப் பெட்டியைப் பூட்டு. பணத்தை அதனுள் வை. இந்தக் காலத்தில் நல்லவன் யார், கெட்டவன் யார் என்பதைக் கண்ணுல் மட்டும் கண்டு பிடித்துவிட முடியாது. செய்கையினுல்தான் காண முடியும். ஜாக்கிரதையாய் இரு. நீ மட்டுமல்ல, உன் தோழர்களுக்கும் இதைச் சொல்லிவை!''

இவ்வளவையும் பக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டருக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏனென்ருல் அந்த வாலிபனின் குரல் அவருக்குப் பழக்கப்பட்ட குரலாய்த் தோன்றியது.

''ஸார்!'' என்று குழைந்தார் இன்ஸ்பெக்டர்.

''என்ன?'' என்று அதே மிடுக்குடன் கேட்டுத் தலை நிமிர்ந்தான் அந்த வாலிபன்.

''உங்களை..!'' முடிக்க முடியாமல் திணறினுர் இன்ஸ்பெக்டர்.

''என்னைத்.....தெரியவில்லையா?'' என்று கேட்டுக்கொண்டே தொப்பியையும், கறுப்புக் கண்ணுடியையும் சுழற்றிவிட்டு ஒட்ட வைத்துக்கொண்டிருந்த பொய் மீசையைப் பிய்த்தெறிந்தான் அந்த வாலிபன்.

''நீயா?'' வாய்விட்டுக் கத்திஞர் இன்ஸ்பெக்டர். பதிலொன்றும் கூருமல் உதட்டோரத்தில் ஒரு புன்னகையை இழைய விட்டான் சந்தானம்.

ஒன்றும் புரியாத மாரி, ''ஓ''வென்று வாயைப் பிளந்துகொண்டிருந்தான்.

''சரி, வாருங்கள் அப்பா, போகலாம்!'' என்று இன்ஸ்பெக்டரின் இடக்கரம் பற்றி இழுத்தான் சந்தானம்.

தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக்கொண்ட சந்தானம், ''அப்பா, இப்பொழுது தெரிந்ததா என் சாமர்த்தியம்? ஒன்றுக்கும் உதவாதவன் என்றீர்களே! எப்படி, என் வேலை? இன்று எப்படியும் உங்களை ஏமாற்ற எண்ணித்தான் ரிக்ஷாவில் ஏறினேன். என்னை அடையாளம் கண்டு கொள்ள உங்களால் முடியாது என்று எனக்குத் தெரியும். எனவே உங்களைச் சோதிப்பது என்று முடிவு செய்தேன். ஆகையால்தான் நீங்கள் பார்த்துக்கொண்டிருந்தபோதே பணத்தை உங்களுக்குத் தெரியும்படியாகக் கால் சட்டைப் பைக்குள் திணித்தேன். நீங்கள் உடனே என்னைப் பின்தொடர்ந்து பிடித்திருக்க வேண்டும். அதுதான் முறை. ஆனுல் நீங்கள் அப்படிச் செய்யாமல் உங்கள் கடமையிலிருந்து தவறிவிட்டீர்கள்'' என்ருன்.

உடனே இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார். ''உன்னைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகத்தானே நான் பின்தொடர்ந்து சைக்கிளில் வந்தேன்? நீதான் எப்படியோ கூட்டத்தில் மறைந்து 'டிமிக்கி' கொடுத்துவிட்டாய்!''

மகன் சொன்னுன்:— ''இது என்ன அப்பா பேச்சு. அப்படியானுல் திருடன் தானே வந்து உங்கள் வலையில் விழுவான் என்று எதிர்பார்க்கிறீர்களா? சரி! முதல் முதலில்தான் தவறவிட்டீர்கள். பிறகு கொத்தவால்சாவடியில் பார்த்தபொழுது ஏன் பிடிக்கவில்லை?''

''பிடித்துவிட வேண்டும் என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனுல் அப்படிப் பிடிப்பதைவிட, பின்தொடர்ந்து செல்வதால் அதிகப் பலன் கிடைக்கும் என்று நினைத்தேன்!''

''சரி, போனது போகட்டும். இனிமேலாவது தும்பைவிட்டு வாலைப் பிடிக்க முயலாதீர்கள். நான் உங்களைச் சோதனை செய்யப் போய், அதுவே ரிக்ஷாக்கார மாரிக்கும் ஒரு பாடமாய் அமைந்துவிட்டது. ஒரு கல்லில் இரண்டு காய்!'' என்று கூறிச் சிரித்தான் சந்தானம்.

''புலிக்குப் பிறந்தது பூனையாகிவிடுமா?'' என்று மாரி யாரிடமோ சொல்லிக்கொண்டிருந்தான்.




# வள்ளியின் ஆசை

**பூவண்ணன்**

அது ஒரு சிறிய கிராமம். கிராமத்தின் தெருக்கள் ஒழுங்கில்லாமலிருக்கும். வீதிகளில் விளக்குகள் அதிகம் இல்லை. எங்கோ ஒன்றிரண்டு விளக்குகள் 'மினுக் மினுக்' என்று எரிந்து கொண்டிருக்கும்.

அந்தக் கிராமத்தில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் பெயர் கந்தசாமி. கந்தசாமிக்கு ஒரே ஒரு பெண் குழந்தை. பெயர் வள்ளி. அவளுக்கு வயது எட்டு.

வள்ளிக்கு நல்ல தின்பண்டங்களைச் சாப்பிடுவதில் அதிக ஆசையில்லை; ஓடி, ஆடி விளையாடுவதிலும் அவ்வளவு ஆசையில்லை; அவளுக்கு நிலாவைப் பார்த்துக்கொண்டிருப்பதில் தான் அதிக ஆசை.

இருட்டியதும் நீல வானத்தில் நிலா தோன்றும். வள்ளி தன் குடிசையை விட்டு

வெளியே வருவாள். வானத்தில் ஊர்ந்து செல்லும் வட்ட நிலாவைப் பார்த்துக் கொண்டே இருப்பாள். பாட்டி சொல்லிக் கொடுத்த, ''நிலா நிலா வா! வா! நில்லாமல் ஓடி வா!'' என்ற பாட்டைப் பாடுவாள்.

நிலா தினமும் வள்ளியைப் பார்க்கும்; வள்ளியின் பாட்டைக் கேட்கும்; அந்தச் சின்னப் பெண், தன் பிஞ்சுக் கைகளை ஆட்டி, கொஞ்சும் குரலில் பாடுவதைக் கேட்டு இன்பமடையும். ஒரு நாள் வள்ளியைப் பார்க்கா விட்டால்கூட நிலாவுக்கு நிம்மதி இருக்காது.

ஒரு நாள் வள்ளி குடிசைக்கு வெளியே வெள்ளி நிற வெள்ளை நிலாவைப் பார்த்துப் பாடினுள். பிறகு வீட்டுக்குள் நுழைந்தாள்; வீட்டின் மூலையில் ஒரு சிறிய அகல் விளக்கு மினிமினிப் பூச்சியைப் போல எரிந்து கொண்டிருந்தது. வள்ளி உடனே வெளியே வந்தாள். வெளியே, எங்கோ தூரத்தில் இருக்கும் நிலாவின் ஒளியில் வீதியெல்லாம் ஜோதி மயமாக இருந்தது. வள்ளியின் கள்ள மில்லா உள்ளத்தில் ஓர் ஆசை உதித்தது. 'இந்த நிலா நம் குடிசைக்குள் இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்! சின்ன அகல் விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் வீடு களை யில்லாமல் இருக்கிறது. இந்த நிலா வீட்டுக்குள் வந்தால் வீடெல்லாம் நிலா வெளிச்சத்தால் அழகாக இருக்கும். நாமும் நிலாவுக்காக இப்படி வெளியே வர வேண்டியதில்லை' என்று நினைத்தாள் வள்ளி.

மறுநாள் மாலை. இருள் எங்கும் பரவியது. மேகத்தைக் கிழித்துக் கொண்டு வெண்ணிலா வந்தது. வள்ளி நிலாவைப் பார்த்தாள். உடனே, ''நிலா! நிலா! நீ எங்க குடிசைக் குள்ளே வந்திடு'' என்று கேட்டாள். நிலாவுக்கு வள்ளியின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்றுதான் எண்ணம். ஆனல் எத்தனை குழந்தைகள் அதற்காகக் காத்திருப்பார்கள்? அவர்களையெல்லாம் ஏமாற்றி விட்டு வள்ளியின் வீட்டுக்குள்ளேயே வாழ முடியுமா? அதனல் நிலா வள்ளியின் அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. வள்ளி அழுது கொண்டே வீடு சென்ருள்.

மறுநாளும் வள்ளி இதே போல நிலாவை அழைத்தாள். நிலா பதில் சொல்லாமல் போய்விட்டது. வள்ளி தினமும் நிலாவை அழைத்துக் கொண்டே இருந்தாள். ஒரு நாள் நிலா வந்தது. வள்ளி,

## மூளைக்கு வேலை



இங்கே 19 வட்டங்கள் உள்ளன. நீங்கள் ஒன்றிலிருந்து பத்தொன்பது வரையுள்ள எண்களை வட்டத்திற்கு ஒன்ருகப் பொருத்த வேண்டும். எந்த 3 நேர் வட்டங்களின் எண்ணிக்கையைக் கூட்டினுலும் 30 வரவேண்டும். முடியுமா?

—ஏ. கே. வி., சேலம்.

"நிலா! நிலா! நீ எங்க வீட்டுக்கு வராவிட்டால் நான் சாப்பிடவே மாட்டேன். இங்கேயே பட்டினியாக இருப்பேன்" என்று சொல்லிவிட்டுக் கீழே உட்கார்ந்துகொண்டாள்.

இரவு எட்டிருக்கும். வள்ளியின் அம்மா அவளைச் சாப்பிடக் கூப்பிட்டாள். வள்ளி பிடிவாதமாக, "நிலா நம்ம வீட்டுக்கு வந்தால்தான் சாப்பிடுவேன்" என்று கூறிவிட்டாள். வள்ளியின் அம்மாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வள்ளியின் அப்பா கந்தசாமி அடுத்த கிராமத்துக்குப் போயிருந்தார். அவர் வந்து சொன்னால் வள்ளி கேட்பாள் என்று நினைத்துப் போய்விட்டாள்.

மேலே இருந்த நிலா இதையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருந்தது. 'நாம் போகாவிட்டால் யார் வந்து என்ன சொன்னாலும் வள்ளி சாப்பிட மாட்டாள்' என்பதைத் தெரிந்து கொண்டது நிலா. உடனே "வள்ளி! வள்ளி! நான் உன் வீட்டுக்கு வருகிறேன். நீ போய்ச் சாப்பிடு" என்றது. "உண்மையாகவா? நீ முதலிலே எங்க வீட்டுக்கு வா. நானும் அப்போதே சாப்பிடுகிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள் வள்ளி.

அடுத்த விநாடி அழகு நிலா ஆகாயத்தை விட்டு இறங்கி, வள்ளியின் சின்னக் குடிசைக்குள்ளே வந்துவிட்டது. குடிசைக்குள்ளே ஒளி வெள்ளம்! எங்கும் குளிர்ச்சி! வள்ளிக்கு எல்லையில்லா மகிழ்ச்சி! அவள் ஆனந்தத்தோடு அம்மா போட்ட சாதத்தைச் சாப்பிட்டு விட்டு நிலாவுக்கு எதிரே வந்து உட்கார்ந்தாள்.

"நிலா! நீ இனிமேல் எங்கள் குடிசையை விட்டு வெளியே போகவே கூடாது. சரிதானா?"

வள்ளி கேட்டதற்கு. நிலா, "சரி, வள்ளி?" என்று சொன்னது. சிறிது பொறுத்து, "வள்ளி, உன் வீட்டிலே நான் இருக்கிறேன். இது உனக்குப் பெருமைதானே? இதை உன் சிநேகிதிகளிடம் சொல்லுவதுதானே?" என்று கேட்டது,

நிலா சொன்னதைக் கேட்டதும் வள்ளி, "இதோ! எல்லோரிடமும் சொல்லிவிட்டு வருகிறேன்" என்று வேகமாக வெளியே சென்றாள். ஆனால் அதே வேகத்தோடு வெளியே நடக்க முடியவில்லை. வெளியே, ஒரே இருள். வானத்தில் நிலா இல்லாததால், வீதிகளில் இருட்டுப் படர்ந்திருந்தது. வள்ளிக்கு இருட்டில் செல்லப் பயமாக இருந்தது. என்றாலும் தட்டுத் தடுமாறிக்கொண்டே அடுத்த வீட்டுக்குச் சென்றாள். ஆனால் வீட்டினுள் நுழையவில்லை. உள்ளே இருந்து பேச்சுக் கேட்கவே வெளியே நின்றாள்.

"பாட்டி, நிலா ஏன் பாட்டி இன்று மறைந்து போச்சுது?"

"மேகத்திலே மறைந்திருக்கும். சீக்கிரம் வந்துவிடும்; நீ சாப்பிடு, கண்ணு."

"போ பாட்டி! நிலா வராமல் நான் சாப்பிட மாட்டேன். அது வந்தால்தான் சாப்பிடுவேன்."

அடுத்த வீட்டுக் குழந்தையும் பாட்டியும் பேசுவது வள்ளியின் காதில் தெளிவாக விழுந்தது. வள்ளி உள்ளே செல்லவில்லை, பேசாமல் வேறொரு வீட்டுக்குப் போனாள். அங்கே அந்த வீட்டுச் சின்னப் பையனும், அவனுடைய அம்மாவும் வெளியே




நின்றுகொண் டிருந்தார்கள். பையன் அழுதுகொண் டிருந்தான். அவனுடைய அம்மா, ''இந்தப் பாழும் நிலா எங்கே போய்த் தொலைந்தது! அது வாரததால் இந்தப் பையன் அழுது தொலைக்கிறானே'' என்று கூறிக்கொண் டிருந்தாள்.

தன்னால் நிலாவுக்குத் திட்டுக் கிடைப்பதைக் கேட்டாள் வள்ளி. அவள் அந்த வீட்டுக்குள்ளேயும் செல்லவில்லை. வேறொரு வீட்டுக்குப் போனாள். வாசலைத் தாண்டுவதற்குள், உள்ளே இருந்து வந்த பேச்சைக் கேட்டுத் திகைத்தாள்.

''அப்பா, நிலா மறைந்து போச்சே! இவ்வளவு நேரமாகியும் வரவில்லையே. ஏன் யாராவது நிலாவைத் திருடிக் கொண்டு போய்விட்டார்களா?''

''இருக்கும் ராஜா! யாரோ திருட்டுப் பயல் அதைத் திருடிக்கொண்டு போயிருப்பான். நாளைக்குத் திருடன் கிட்டே இருந்து நிலா வந்துவிடும். நீ தூங்கு.''

வள்ளி வெளியே வந்தாள். நிலா தன் வீட்டில் இருப்பதால் எல்லாக் குழந்தைகளும் சாப்பிடாமல் கஷ்டப்படுவதைக் கண்டாள். நிலாவைப் பாழும் நிலா என்று திட்டுவதையும் கேட்டாள். அதைத் திருடிக்கொண்டவள் தான் தான் என்பதையும் உணர்ந்தாள். 'நிலா என் வீட்டில் இருப்பதால் இத்தனை பேருக்கா கஷ்டம்?' என்று நினைத்தாள் வள்ளி.

இருளில் வழியில் கிடந்த கல்லில் மோதிக்கொண்டாள் வள்ளி. அவளுடைய கால்வலித்தது. நொண்டி நொண்டி நடந்து வந்தாள். வீட்டுக்கு வெளியே வள்ளியின் அப்பா கந்தசாமி வருத்தத்தோடு உட்கார்ந்திருந்தார். அவர், அம்

மூளைக்கு வேலை—விடை




மாவிடம் ஏதோ கூறிக்கொண்டிருந்தார். வள்ளி அப்பா சொல்வதைக் கேட்டாள்.

''என்ன செய்கிறது? நிலா இருந்ததால் தைரியமாகப் புறப்பட்டேன். பாதி வழி வருகிறதுக்குள்ளே அது மறைந்துவிட்டது. யாரோ திருட்டுப் பயல்கள் என்னை வழி மறைத்துக் கையிலிருந்த காசெல்லாம் பறித்துக் கொண்டார்கள். இருட்டு என்றால் திருட்டுப் பயல்களுக்குக் கொண்டாட்டம்தானே!''

அப்பா பேசுவதையெல்லாம் நின்று கேட்கவில்லை வள்ளி. அவள் வேகமாக வீட்டுக்குள்ளே போனாள். நிலா வள்ளியைக் கண்டதும், ''என்ன, வள்ளி! உன் சிநேகிதிகளிடம் நான் உன் வீட்டிலிருப்பதைச் சொன்னாயா?'' என்று கேட்டது.

வள்ளி அழுதுகொண்டு, ''நிலா, நீ எங்கள் வீட்டிலே இருக்கிறதனாலே, வெளியே ஒரே இருட்டு. வழியே தெரியவில்லை. திருடர்கள் எங்கப்பாவின் பணத்தை வேறே பறித்துக்கொண்டார்கள். கிராமத்துக் குழந்தைகள் எல்லாம், சாப்பிடாமல் அழுகிறார்கள். பெரியவர்கள் உன்னைத் திட்டி, என்னையும் 'திருடி' என்றார்கள். அதனாலே நீ எப்போதும் போலவே ஆகாயத்துக்குப் போய்விடு. அப்போதுதான் எல்லோரும் சந்தோஷப் படுவார்கள்'' என்று சொன்னாள்.

நிலா சிரித்தது. ''வள்ளி, அழாதே, நான் இப்போதே ஆகாயத்துக்குப் போய்விடுகிறேன். நீ மட்டும் சந்தோஷமாக இருந்தால் போதாது. எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும். இது உனக்குத் தெரிந்துவிட்டது. அதுவே போதும்; நான் போய் வருகிறேன். எப்போதும் போல என்னை மறக்காமல் இருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு, நிலா 'விர்'ரென்று வானத்துக்குப் போய்விட்டது.

வள்ளி வெளியே வந்து பார்த்தாள். தெருவெல்லாம் ஒளி மயம். பக்கத்திலிருந்த வீட்டிலிருந்த எல்லாக் குழந்தைகளும், ''அதோ நிலா! நிலா வந்துவிட்டது'' என்று மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்துகொண்டே சாப்பிட்டார்கள். வள்ளி அதைக் கேட்டுச் சந்தோஷப் பட்டாள். அவள் வானத்தைப் பார்த்தாள்; வட்ட நிலா வள்ளியைப் பார்த்துச் சிரித்தது. வள்ளி, ''மலை மேலே ஏறிவா!, மல்லிகைப் பூ கொண்டு வா! நிலா நிலா ஓடி வா, நில்லாமல் ஓடி வா'' என்று உற்சாகத்துடன் பாடினாள்.

# இதய தடாகம்

'சுருமீன்'



பிறந்த நாளன்று மலையாகக் குவிந்த பரிசுகளிலே மனத்தைக் கவர்ந்தது அந்தப் பச்சைப்பெட்டி! அதனுள்ளே உறங்கியது விலையுயர்ந்த பேனா. அருமை நண்பன் ஆனந்த் ஆசை ததும்ப அன்பு மனத்துடனே அளித்திட்ட பரிசு அது! கண்ணைப் பறிக்கும் தங்க மூடியுடனே, கருத்தை ஈர்க்கும் அழகு வண்ணத்துடனே மதிப்புமிக்க பேனா அது - ஈடிலா நட்பினை இயம்பி நின்றது. கூறிலா முகத்திலே கூறொன்றைத் தன் மென் முனையால் கீறி நின்றது. கையிலே பேனாவை எடுத்துக் கண்ணிலே ஒற்றிக்கொண்டு, கருத்திலே எண்ணினான் நண்பன் சேகர்.

மனத்திலே—

பலப்பல எண்ணங்கள்.

கருத்தை இழுக்கும் கதாசிரியனின் மூலபலம், கபடற்ற சேகரிடையே கடும் புயலொன்றை எழுப்பி நின்றது.

பேனா.. விலையுயர்ந்த பேனா..

நண்பன் ஆனந்தால் அளிக்கப்பட்ட அழகுப் பரிசு!

சிந்தனைக் களத்திலே செருக்கு ஒன்று தாண்டவமாடியது. சிதைத்தெறிந்தது நட்பின் பாகத்தை.

ஆனந்த்.. நண்பனின் அன்புப் பரிசு..

'அன்புப் பரிசா இது? சீ.. அவலட்சணத்தின் சின்னம். தேர்வில் தவறி விட்டவனின் தகுதியில்லாப் பரிசு. அதை நான் உபயோகிக்கத்தான் வேண்டுமா? ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமா?'

நண்பனின் அன்பளிப்பு விலைமிக்க பொருள்.

'உத்தம தோழனை உவகைப்படுத்த நீ செய்யும் காரியம், அதை உதறி எறிவதுதானா? அவனுடைய அன்பின் சின்னத்தைப் பரிசு பலவற்றிலும் போற்றிப் பெருமிதமடைவது இல்லையா?

''அவன் வாழ்வு தவறியது. அவன் கைப் பேனாவால் என் வாழ்வும் தவறத்தான் வேண்டுமா? அதிர்ஷ்டமற்றது அவனது பாதை. அவன் நட்பு என்னையும் துன்பத்தில் ஆழ்த்தத்தான் வேண்டுமா? இருக்கலாம். ஒரு சமயம் அவனுடன் ஒருயிராகப் பழகினேன். எப்போதும் அப்படியே இருக்க

வேண்டும் என்று என்ன நியதி? பகல் இரவாவதில்லையா? பால் மோராய்த் திரியாதா?

'ஆற்றின் அமுத நீர் கடலில் உப்பாவதில்லையா?'

துவேஷ எண்ணமே ஓங்கி நின்றது. கையிலிருந்த ஊற்றுப் பேனா எள்ளி நகைத்தது தன் வெற்றியைக் குறித்து. ''நான் நட்புச் சங்கிலியைப் பலப்படுத்த வந்த பாலம் அல்ல. அதை என் கூர்முனையால் துண்டு துண்டாய்ச் சிதைக்க வந்த கோடரி.

சேகர்..யோசித்தான்..யோசித்தான்..யோசித்துக் கொண்டேயிருந்தான். ஆத்திரம் தலைக்கேறியது. பேனாவை வீசியெறிந்தான் தரையை நோக்கி.

அவன் கண்தான் மூடிவிட்டதா?

ஆனந்தின் கண்களில் நீர் ததும்பியது. 'சேகர், என்ன கோபம் உனக்கு என்மேல்? உயிர்த் தோழனும் என்னை உதாசீனப் படுத்த, என்ன தவறு செய்து விட்டேன் நான்? சொல்.'' மனமுடைந்து கேட்டான் அவன். அவன் கண்ணீர் சேகரின் கருத்தை மாற்ற வில்லையே! ''ஒன்று மில்லையடா, என்னிடம் ஏற்கனவேயே இரண்டு பேனாக்கள் இருக்கின்றன. இது வெறும் அதிகப் படிதானே? உனக்கும் இதனால் ஏகப் பணம் தண்டம்'' என்று பதில் கொடுத்தான் சேகர்.

''வெறும் அதிகப்படி..''

அவனது கடுத்த முகமும் குற்றமுள்ள கண்களும் ஆனந்தின் அன்புப் பார்வையினின்று தப்பி விட்டனவே. ''பேனாவை என் நினைவாக வைத்துக்கொள் சேகர்'' என்ற ஆனந்தின் கடைசி வேண்டுகோளையும் உதறியெறிந்தான் சேகர். ''ஹூம், இதை வாங்கிக் கொள். எனக்கு நேரமாகி விட்டது. சாயங்காலம் உன்னுடன் பேசுகிறேன்'' என்று கூறி விட்டுத் திரும்பியும் பாராமல் சென்றுவிட்டான் நண்பன்!

* * *

இருவரும் நன்றாகப் படிப்பவர்களானாலும், பரீட்சை முடிவு வேறு விதமாகத்தான் இருந்தது. ஆனந்த் தவறி விட்டான். சேகர், நல்ல மார்க்குகளுடன், உயரிய முறையில் உற்சாகக் கடலிலே மிதந்தான். மண்டையை உடைத்துக் கொண்டான் ஆனந்த். அழுதான், விழுந்தான், புரண்டான். உலகமோ கைகொட்டிச் சிரித்தது. ''ஐயே, இந்த ரோசம் பரீக்ஷைக்கு முன்பு எங்கே போயிற்று?'' என்றது. ஆனால்..தவறு ஆனந்தின் பேரில்தானா? அர்த்தமற்றதென 'அறிவாள'ரால் கூறப்பட்டாலும், அவன் காலை வாரி விட்டது விதிதானே? பரீக்ஷை ஹாலிலே மூர்ச்சையற்று விழுந்தான் ஆனந்த். நேரம் தப்பி வந்தது உதவி.

தற்போது ஆனந்த் நடைப் பிணமாகி விட்டான். உற்சாகம் எதிலும் இல்லை. ஓராண்டு வீணாகி விட்டதே என்று தவித்தான். ஆசிரியர்கள் சிலர், ''கவலைப் படாதே. அடுத்த பரீட்சை நல்ல படியாக முடியும்'' என்று கூறினார்கள், ஆருயிர் நண்பன் சேகர், ஆனந்தைத் தேற்றினான். ''ஆனந்த், வருத்தப்படாதே! தோல்வியைப் பெரிதாக எண்ணாதே. பரீட்சையில் தோல்வியை மிகைப்படுத்துவது வெறும் முட்டாள்தனம்தான். என் திறமை, முடிவால் அப்படியென்ன பாதிக்கப்பட்டு விட்டது, அல்லது பாசானவர்கள் எல்லாரும்தான், உன்னைவிடத் திறமைசாலிகளா?'' என்று நா தழுதழுக்கக் கூறினான்.

வெறுப்பிலும் ஒரு விருப்பு. சேகரின் உருக்கம் ஆனந்தை வெகுவாகத் தேற்றியது. உறைந்த துயரத்தைத் திரைகொண்டு மூட முயன்றான் ஆனந்த்.

முன்னைவிடத் திறமையுடன் படித்தான் அவன். சேகரின் வகுப்புப் புத்தகங்களையும் அவ்வப்போது படித்து ஆறுதல் அடைந்தான் அவன். இவ்வளவு சுலபமான பாடங்களில் உரிய காலத்தில் என் மூளையை உபயோகிக்க முடியவில்லையே என்ற குறை இருக்கத்தான் செய்தது.

நண்பன் சேகர், உத்தம நண்பனுக்குரிய அத்தனை குணங்களும் அற்புதமாகப் பொருந்திய உண்மைத் தோழன். ''வறண்டு கிடந்த பாலைவனத்துக்கு வாழ்வளித்தவன் நீயே'' என்று போற்றினான் ஆனந்த். உள்ளம் குமுறிய போதிலே ஊக்கம் அளித்துக் காத்த நண்பன் மீது பாசம் பெருகியது. ஊண், உறக்கம், படிப்பு தவிர மற்றவைகளிலே ஒன்று பட்டு, இன்பம் கண்டனர் நண்பர்கள். இடி இடித்த புயல் இன்பம்தரும் அன்புத் தென்றலிலே பயனளித்தது.

நாட்கள் கடந்தன. இயற்கையின் கோலத்துக் கொப்ப, பொறாமை விஷ வித்துக்களின் பயனாக, சேகரின் மனத்திலே அவனும் அறியாது ஓர் உயர் எண்ணம் ஏற்பட்டது. அவன் அறியவில்லையே அதை? அறிந்திருந்தால் மாறுசெய்திருப்பானே? இப்போதோ,-

தனிமையில் குமுறும் எண்ண அலைகளைச் சுழல விட்டான் ஆனந்த். சேகரின் மனமாற்றத்துக்குக் காரணம் அவனுக்குப் பிடிபடவில்லை. தனது தோல்வியையும், பேனாவையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியவில்லை. பின்னலைப் போல் அதுவும் அவன் மனக் கண் முன் தோன்றி மறைந்தது. சேகரை அவ்வளவு மட்டரகமாக எண்ண முடியவில்லை அவனால்? பேனாவின் மூடியிலே ஒரு தெறிப்பு அவன் கண்ணைப் பிடுங்கியது. சேகரா அந்தக் காரியம் செய்திருப்பான்? இருக்கவே இருக்காது. அவன் வீட்டில், வேறு யாராவது, குழந்தைகள்தான் செய்திருக்க முடியும்; பாவம்..வருஷத்துக்கு ஆறு பருவம் உண்டென்று அவனுக்குத் தெரியாது. ஒரே வசந்தம்தான் என்றெண்ணும் அப்பாவியாயிற்றே அவன்!

நாட்கள் நகர்ந்த வண்ணமே நின்றன.

இரண்டு கண்கள், ஒரே பொருளை ஒரே விதமாகத்தான் காண்கின்றன. ட்ரகோமா என்னும் கண்நோய் திடீரென இடது கண்ணைத் தாக்கி விட்டது. கண்ணின் கருமணிமேல் தோன்றிய வெண்மையுரை பார்வையை மறைத்தது. ஆனாலும், வலது கண், இரு கண்ணின் பங்கையும் தானொன்றே நின்று செய்ததால், இடக் கண்ணின் குறை வெளியாருக்குத் தெரியவில்லை. இது



இன்று முதல்!




சேகர் விஷயத்தில் நடந்தது. ஆனந்தின் அன்பு அனைத்தையும் மூடி விட்டது. உண்மை நட்பின் ஒளியொன்று மட்டும் வெளியே தெரிந்தது. காண்போர் கண்ணைக் கூசச் செய்தது.

ஆண்டுத் தேர்வு வேகமாக வந்தது. பார்க்கர் பேனாவும் கண்ணிலே திரும்பப் பட்டது. அதைச் சரி செய்து மசி போட்டு அதிகப்படி பேனாவாகத் தயார் செய்து கொண்டான் ஆனந்த்.

சேகர், முற்றிலும் படிப்பில் மூழ்கினான். ஒலிப் பதிவுக் கோட்டிலே ஊசி தேயும்போது ஓசை கிளம்புவது போல, நினைவுச் சுழலிலே பரீட்சை எண்ணம் கீறும் போது பழைய கோர எண்ணம், சேகரைச் சூழ்ந்தது.

பரீட்சை மண்டபத்திலே சேகரும், ஆனந்தும் அடுத்தடுத்த வகுப்பானதால் ஒரே வரிசையில் அவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

சேகர் மும்முரமாகப் பரீட்சை எழுதிக்கொண்டிருந்தான். அவனது ஊற்றுப் பேனா மேஜையிலே ஒரு பள்ளத்திற்குத் தன் முனையைப் பலிகொடுத்து அவன் துயரத்தைக் கிளறிவிட்டது. மாற்றுப் பேனாவுமில்லை.

''ஸார்!'' கெஞ்சும் குரலிலே பரீட்சை அதிகாரியை அழைத்தான்.

''ஸார் என் பேனா உடைந்து விட்டது.''

''அதற்கு என்னை என்னப்பா செய்யச் சொல்கிறாய்? பரீட்சையாயிற்றே, ஒன்றுக்கு இரண்டாகப் பேனா கொண்டுவரவேண்டாமா?''

கலங்கிய கண்களுடன், சேகர் விழிகளை சுற்றுமுற்றும் ஓட்டினான்.

ஆனந்த் மனத்திலே கிளர்ச்சி. அவன் வைத்திருப்பது இரண்டு பேனா? ஆனால்..

நண்பனுக்கு உதவ வேண்டும், ஆபத்திலிருந்து அவனைத் தப்புவிக்கவேண்டும்.

''ஸார், இந்தப் பார்க்கர் பேனாவைச் சந்திரனிடம் கொடுத்துவிட்டு, அதற்குப் பதில் அவன் பேனாவைச் சேகருக்கு வாங்கிக் கொடுங்கள், ஸார்! எனக்காகத் தயவு செய்யுங்கள், ஸார்!'' என்று கேட்டுக் கொண்டான்.

''ஏன், இருவரும் பேசுவதில்லையோ?'' என்று சிரித்தவாறே பரீட்சை அதிகாரி, ஆனந்தின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தார். சந்திரன், சேகரின் வகுப்பில் நன்கு படிக்கும் ஒரு மாணவன்! அன்று மாலை..

''ஆனந்த், என்னை மன்னித்துவிடு. பைத்தியக்காரத்தனமாக உள்ளத்தை நோக அடித்து விட்டேன். ஐயோ, நினைத்தாலும் உள்ளம் எரிகிறது. மன்னித்தேன் என்று உன் அமுத வாக்கால் சொல்லேன்'' என்றான் சேகர்.

அன்பு ததும்பும் இன்பமொழி ஆனந்தின் வாயினின்று வழக்கம் போல் வெளி வந்தது. ''மொட்டில் அழகு குறைவென்று, மலர்ந்த தாமரையை உதாசீனம் செய்யமுடியுமா? சேகர், நீ என் இதயத் தடாகத்திலே விளைந்த தாமரை'' என்றான் அவன்.

சேகர் கூறினான்: ''ஆனந்த், உன் அன்பளிப்பை இப்பொழுது எனக்குக் கொடு. அழுக்கு மனத்தைக் கழுவி விட்டேன் நான். நாளை அந்தப் பேனாவால்தான் பரீட்சை எழுதப்போகிறேன்.''

# நீங்களும் நானும்

ஆர்வி

**என். மீனுட்சி, குடந்தை**

கே: புதிர் என்ருல் என்ன?

ப: அவிழ்க்க முடியாமல் போடும் முடிச்சு. அவிழ்க்காத முடிச்சும் இல்லை; விடுவிக்காத புதிரும் இல்லை. தகுதியுள்ளவர்கள் முயன்ருல் இரண்டும் சாத்தியமே.

**தே. பூவராகன், திருமுட்டம்**

கே: உலகப் புகழ்பெற்ற சிறந்த வீரன், அல்லது உலகப் புகழ்பெற்ற சிறந்த கவிஞன் இவர்கள் இருவரில் நீங்கள் யாரைத் தேர்ந்தெடுப்பீர்கள்?

ப: சிறந்த வீரனைத்தான். ஏனெனில் கவிஞனும் சிறந்த வீரனைத் தான் தேர்ந்தெடுக்கிருன் தனக்குக் காவிய நாயகனுக.

**பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி, பாபநாசம்**

கே. ஒரு மாணவனுடைய கடமைகள் எவை?

ப: குடும்பம் என்கிற நாவலில் அவன் ஒரு முக்கியமான பாத்திரம். எதிர்காலக் கதாநாயகன். நாட்டுக்கும் வீட்டுக்கும் செய்ய வேண்டிய சிறந்த பணிகள் யாவும் அவனுடையவை. மாணவன் என்ன, மாணவியும் அப்படித்தான். எதிர்காலக் கதாநாயகி அவள்.

**கே. ஏ. முகம்மது அலி, சிதம்பரம்**

கே: லைலா மஜ்னு கதையைப் பாடிய கவிஞன் யார்? எப்போது?

ப: கி. பி. 1146-இல் பிறந்து 1202 வரையில் வாழ்ந்த நிஜாமி என்ற பாரசீகக் கவிஞன் பாடிய சோகரச காவியமே லைலா-மஜ்னு கதை.

**சியாவுத்தீன், பறங்கிமலை**

கே: இன்று உலகில் அதிகமாகப் பெயர் அடிபடும் பிரமுகர்கள் யார், யார்?

ப: ஜவாஹர்லால் நேரு, ஐஸன் ஹோவர், குருஷ்செவ் ஆகிய மூவர் பெயர்தான் அதிகமாக அடிபடுகின்றன. அடுத்தபடிதான் கர்னல் நாஸர், புல்கானின், மாக்மில்லன், டல்லஸ், வி. கே. கே. மேனன் இவர்கள் பெயர்கள் அடிபடுகின்றன.

கே: விடுதலைப் போரில் ஈடுபட்டு, புரட்சி செய்து தம் ஆயுட் காலத்திலேயே நாட்டின் நிர்வாகத்தை நடத்துபவர்கள் யார்?

ப: மாவோசேதுங், நேரு, டிட்டோ, ஹோசிமின், சுகர்ணோ, நாஸர் இவர்களைச் சிறப்பாகக் கூறலாம்.

**ஸ்ரீதரன், விருத்தாசலம்.**

கே: உலகின் மிகப் பெரிய பலசாலி யார்?

ப: அவன் மிகவும் சோனியாக இருப்பான். ஒரு மரக்கால் தானியத்தை விதைத்து, பத்துக் கலம் தானியமாக்குபவன் அவன். எந்தப் பலசாலிக்கும் அவன் வல்லமை கிடையாது. சந்திர மண்டலம் போக வேண்டுமானுலும் அவன் தயவு இல்லாவிட்டால் ஒன்றும் நடவாது.

**எஸ். பாலகிருஷ்ணன், திருச்சி.**

கே: ஒருவனுக்கு நண்பர்கள் அதிகம் அவசியமா?

ப: நண்பர்கள் மனிதனுக்குத் தலைமயிரைப் போன்றவர்கள். நண்பர்கள் அதிகம் இருந்தாலும் தொல்லை. இல்லாவிட்டாலும் தொல்லைதான். அதிகமாக இருந்தால் அடர்ந்து அழுக்குப் பிடித்து, சொரி சிறங்கு முதலானவை உண்டாகும். இல்லாவிட்டாலோ வழுக்கையாக இருக்கவேண்டி வரும். ஆகவே அப்போதைக்கு அப்போது நண்பர்கள் குறிப்பாகவும் அளவாகவும் இருப்பது அவசியம்.

**எஸ். அப்துல் கரீம், திருப்பத்தூர். வ. ஆ.**

கே: தகப்பனுருக்கு க்ஷயரோகம் இருந்தால் குழந்தைகளுக்கும் அது வருமா?

ப: அவசியமில்லை. அது பரம்பரையாக வரும் வியாதியல்ல. க்ஷயரோகம் ஒரு தொற்றுநோய்.

**கே. ராஜகோபாலன், சென்னை-2.**

கே: பழங்களில் மிகச் சிறந்த பழம் எது?

ப: பேரீச்சம்பழம். அந்தப் பழத்தின் சுவை எல்லாருக்கும் பிடிக்கும். அதிகமான உணவுச் சத்து உள்ளது. அதிலுள்ள இயற்கைச் சர்க்கரை நல்ல போஷாக்குத் தருகிறது. விலை குறைவு; எளிதாகவும் கிடைக்கக் கூடியது. பேரீச்சையும் பாலுமே ஒரு மனிதன் உயிர்வாழப் போதுமானவை. ஓர் இனிய முழு உணவுப் பழம்.

**ஏ. மதிவாணன், மதுரை.**

கே: நீங்கள் முதலில் அவசரமான காரியத்தைச் செய்வீர்களா, அவசியமான காரியத்தைச் செய்வீர்களா?

ப: எனக்குப் பயமாக இருக்கும் காரியங்களையே எப்போதும் முதலில் செய்வேன்.

**செல்வராஜ், யாழ்ப்பாணம்.**

கே: காந்தியடிகள் செய்த உண்மையான அற்புதம் என்ன?

ப: தேசத்தின் பெரிய பெரிய சிங்கங்களைத் தமக்கு அடங்க வைத்து, பிரிட்டிஷ் சிங்கத்தை விரட்டியதுதான். நேரு, போஸ், படேல், ராஜாஜி, பிரசாத், ஆஸாத், சரோஜினி, ஜயப்பிரகாஷ், கபார்கான் முதலியோரைத் தனித் தனியாகப் பார்த்தால் ஒவ்வொரு ஒரு பெரிய சிங்கம் என்பது நன்ருகத் தெரியும்.

**டி. மோகனசுந்தரம், பட்டுக் கோட்டை.**

கே: ஒரு சினிமா நடிகையின் குழந்தை என்ன நினைப்பான்?

ப: நினைப்பது என்ன? பிச்சைக்காரிகூடத் தன் குழந்தையை நெஞ்சோடு அணைத்துப் பாலூட்டி மகிழ்வதைக் கண்டு பொருமைப் படுவான்.

**எஸ். ராஜவேலு, திருப்புவனம்.**

கே, கண்ணனில் இந்த 1958-இல் நாயன்மார் கதைகளை வெளியிடுகிறீர்களே, உங்களை....

ப: பைத்தியக்காரன் என்று அழைக்க வேண்டும் போல் தோன்றுகிறதோ? பல நூற்ருண்டுகளாக அந்தக் கதைகள் இந்த நாட்டின் ஆத்மாவைக் காத்து வருகின்றன. இனியும் அவைதான் காக்கப் போகின்றன. அந்தக் கதைகளைத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள் படிக்கட்டுமே. நம் நாட்டு நாகரிகத்தின் வயது 1958 அல்ல. அதனேடு குறைந்தது ஐயாயிரம் ஆண்டுகளையாவது சேர்த்துக்கொள். சோம்பேறிகளின் ஏட்டுப் பகுத்தறிவு நமக்கு வேண்டாம்.

**பி.எஸ். லக்ஷ்மணன், புதுக்கோட்டை.**

கே: தென்துருவத்தை முதலில் கண்டு பிடித்தவர் யார்? எந்த ஆண்டில்? டாக்டர் புஷ் என்பவரின் சாதனை என்ன?

ப: ஸ்காட் என்பவர் தென் துருவத்தை 1912-இல் எட்டிப் பிடித்தார். ஆனுல் அதே சமயத்தில் அவருக்கு முன்னுல் ஆமுண்ட்ஸன் என்பவர் வேறு வழியாக வந்து தம் கொடியைத் தென் துருவத்தில் நட்டு விட்டுப் போயிருந்தார். அதைக் கண்டு ஸ்காட்டுக்கு ஏமாற்றமாகப் போய் விட்டது. ஆமுண்ட்ஸன் உயிருடன் திரும்பி விட்டார். ஆனுல் ஸ்காட் வரும் வழியில் உறையும் பனியில் உயிர் துறந்துவிட்டார். அதற்குப் பிறகு யாரும் தென்துருவத்துக்குப் போகத் துணியவில்லை. சமீபத்தில் இமயம் ஏறிய வீரர் எட்மண்ட் ஹிலாரி கால்நடையாகத் தென் துருவத்தை அடைந்த செய்தியை நாம் அறிவோம். இப்பொழுது மற்ருேர் அரிய சாதனையை டாக்டர் விவியன் புஷ் என்ற பிரிட்டிஷ்காரர் சாதித்து முடித்திருக்கிருர். தென் துருவம் உள்ள அண்டார்ட்டிகா கண்டத்தைத் தரை மார்க்கமாக அவர் கடந்திருக்கிருர். 2100 மைல் தூரமுள்ள அந்த மார்க்கம் தென் துருவம் வழியாகச் செல்கிறது. வெட்டல் கடலிலுள்ள ஷாக்கில்டன் துறையிலிருந்து ராஸ் கடலிலுள்ள ஸ்காட் துறைக்கு பல இன்னல்களுக்கு இலக்காகியும் அவற்றிலிருந்து மீண்டு அவர் தம் யாத்திரையை வெற்றிகரமாக முடித்திருக்கிருர்.

# கறுப்புக் கண்ணாடி

பரிசுபெற்ற தொடர்கதை:

'பூரம்'

## 5. கைக்குக் கிடைத்தது



ஒரு நிமிஷம்.... இரண்டு நிமிஷம். கட்டிலிலிருந்து அந்த உருவம் எழுந்திருக்கவில்லை..... அசையவில்லை.... பேச்சு மூச்சில்லை. 'மறுபடியும் தூங்க ஆரம்பித்துவிட்டானு?..தூங்கு!.. தூங்கு; நன்ருகத் தூங்கு! இப்போதைக்கு எழுந்திருந்து தொலைக்காதே. காரியம் முடிகிறவரை தூங்கு' என்று ஸ்ரீதரன் வேண்டிக்கொண் டிருந்தான். சம்பத் மூச்சுகூட லேசாக விட்டான். அவன் அந்தக் கட்டிலுக்கு அடியில் பாய்ந்து வந்த பொழுது காலில் ஏதோ பலமாக இடறி விட்டது. காலில் காயம் பட்டு ரத்தம் வழிந்தது. எது அப்படி இடறியது? தேடிப் பார்த்தான் அவன். கையில் ஏதோ அகப்பட்டது. ஒரு வேளை அது ரகசியக் கதவாக இருக்குமோ? அந்தக் கைப்பிடிதான். கைப்பிடியை பலமாக இழுத்தான். அப்படியும் இப்படியும் அசைத்தான். வெகு சுலபமாகத் திறந்து கொண்டது. ஆகா! என்ன அதிர்ஷ்டம்! டார்ச்சிலிருந்து ஒளி பறந்தது. கட்டிலுக்கு அடியே ரகசிய அறை, நல்ல சாமர்த்தியம். சிறிய சிறிய பெட்டிகள் இருந்தன. அவைகளின் நடுவே..அதோ அந்த மூட்டை! அதேதான். மூச்சை அடக்கிக்கொண்டு அதை எடுத்தான். ஆகா! இவ்வளவு சுலபமாகவா எடுக்கும்படி வைத்திருக்கிருர்கள்? என்ன ஆச்சரியமாக இருக்கிறது! மூட்டையில் அவன் நினைக்கிறபடி அந்த இரும்புப் பெட்டியும் போலீஸ் உடைகளும் இருக்கின்றனவா? அவன் ஊகித்தபடி சுப்பு கொண்டு வந்திருந்த மூட்டை இதுதானு?.... இலேசாக மூட்டையைத் தொட்டு அமுக்கிப் பார்த்தான். இரும்புப் பெட்டி இதற்குள்தான் இருக்கிறது. மூட்டையை ஓசைப் படாமல் நகர்த்தி வெளியே கொண்டு வந்தான். அவன் வருகைக்காகவே ஸ்ரீதரன் அறையின் வாசற்படியில் காத்திருந்தான். ஸ்ரீதரனிடம் மூட்டையைக் கையில் கொடுத்து, ''சத்தம் போடாமல் அடுத்த வீட்டு வழியாகப் போ முன்னுல்'' என்ருன் சம்பத். ''நீ....?'' என்று கேட்டான் ஸ்ரீதரன்.

''நான் பின்னுல் வருகிறேன்... மூட்டையைப் பத்திரமாக எடுத்துக் கொண்டு நேராக இதே தெருவோடு போ. நான் மோட்டார் சைக்கிளில் வந்து உன்னைப் பிடிக்கிறேன்..''

''இதே தெருவில் நேராகவா?''

''ஆமாம், வந்த வழியாகத்தான். ஞாபகப்படுத்திக்கொள்.''

ஸ்ரீதரன் திறந்திருந்த ஜன்னல் வழியாக அடுத்த வீட்டுக்குள் வந்து சேர்ந்தான். அவன் மனத்தில் பெரும் போராட்டம். சம்பத் வரும்வரை காத்திருக்கலாமா அல்லது அவன் சொன்னபடியே போகலாமா என்றுதான். வந்தால் வந்த வழியாகத்தானே வரவேண்டும்? காத்திருக்கலாம் என்று தோன்றியது. ஆனுல் மறு கணம் சம்பத் எதற்காகவோ

வேண்டுமென்றுதானே அப்படி அவசரப்படுத்தி நம்மைப் போகச் சொல்லி யிருக்கிறான். கிளம்பிப் போகவேண்டியதுதான். சுப்புவின் கண்ணில் படாமல் போக வேண்டும். பார்த்தால் அவன் ஏதாவது அலறுவான். காலை நன்றாக ஊன்றி ஓசைப் படாமல் நகர்ந்தான். எங்கிருந்தோ குறட்டைச் சத்தம் நிச்சப்தத்தைக் குலைத்துக்கொண்டிருந்தது. அது அந்த அசட்டுச் சுப்புவினுடையதுதான். வெளிச்சம் இலேசாக இருந்தது. சிறிது நேரம் போனபின் கண்களுக்குப் பழக்கப் பட்டபின் அந்த மாடியிலிருந்த ஒவ்வொரு பொருள்களும் தெரிய ஆரம்பித்தன. அங்கே படுத் துறங்குவது சுப்புதான். அவனைத் தாண்டிக் கொண்டுதான் மாடிப் படி இறங்கும் இடத்திற்குப் போக வேண்டும். எவ்வளவு மெதுவாக நடந்தாலும் ஏன் இப்படிச் சத்தம் கேட்கிறது? சுப்புவின் காலைத் தாண்டித்தான் போக வேண்டும். எவ்வளவோ மெள்ளத்தான் காலை வைத்தான். 'டபார்' என்று முழங்கை எங்கோ பக்கத்தில் இடித்து, சத்தத்தை உண்டு பண்ணியது. சுப்பு புரண்டான். சப்தம் அவனை எழுப்பி விட்டது. ஸ்ரீதரன் ஒளிந்து கொள்வதற்கு முயல வில்லை. ஏனென்றால் ஒளிந்து கொள்ள இடம் இல்லை. அசையாமல் கல் சிலை போல் நின்றான். சுப்பு படுக்கையில் எழுந்து உட் கார்ந்தான். அவன் ஏதோ துஷ்ட மிருகம் கர்ஜிக்கும் தொனியில்..பயத்தில், ''ஆழு..ஆழு.. ஐயோ!'' என்று கத்தினான் ஸ்ரீதரனுக்குக் கலவரமாகி விட்டது. மூட்டையைக் கீழே வைத்துவிட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான் அவன் மேல். சுப்புவின் மென்னி இறுகியது. ''டேய், கத்தினாயோ! தொலைந்தாய். கொன்னுடுவேன். பேசாமல் நான் போகிறவரை படுத்துக்கொண் டிரு'' என்றான் ஸ்ரீதரன் கட்டைக் குரலில். சுப்புவுக்குத் தலையிலிருந்து கால்வரை ஒரே உடல் நடுக்கம். வாயைத் திறக்கவில்லை. அப்புறம் என்ன? ஸ்ரீதரன் மூட்டையை எடுத்துக் கொண்டு நகர்ந்தான். மாடிப்படிகளில் எவ்வளவு வேகமாக ஆனால் சத்தப் படாமல் நடக்க முடியுமோ அப்படி நடந்தான். வாசலில் கிழவரிடம் தப்பவேண்டும். விழித்துக்கொண் டிருக்கிறாரோ அல்லது தூங்கி விட்டாரோ? கதவைத் திறந்து மெள்ள எட்டிப் பார்த்தான். அங்கே கிழவரைக் காணவில்லை. ஐயையோ! எங்கே தொலைந்து விட்டது கிழம்? படுக்கை போட்டபடி கிடந்தது. அது எங்கே போனால் என்ன? நம் காரியம் ஆகவேண்டும். கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான் அவன். வாசலில் மோட்டார் சைக்கிள் வைத்தபடி இருந்தது. சம்பத் அதில் வேகமாக வந்து அவனோடு சேர்ந்து கொள்ள வேண்டும். ஸ்ரீதரன் வேகமாக நடக்க ஆரம்பித்தான். வந்த வழி அவனுக்கு ஞாபகத்தில் இருந்தது. வெகு வேகமாக நடந்தான். ஜனநடமாட்டமே இல்லை. மணி பன்னிரண்டு இருக்கலாம். ஒவ்வொரு நிமிடமும் சம்பத் வந்து விடமாட்டானா என்று இருந்தது. ஆயிற்று! கிட்டத் தட்ட ஒரு மைல் வந்திருப்பான் அவன். வெகு தூரத்தில் ஒரு ஆள் வருவது தெரிந்தது. அது யார்? அவன் ஏதாவது நம்மிடம் குறுக்கிடாமல் இருக்க வேண்டும். ஏதேனும் சொல்லிச் சமாளிக்க வேண்டியதுதான். அவன் நினைத்தது சரியாகப் போய் விட்டது. வந்த ஆள் எதிர்த்தாற்போல் நின்றான்.

''டேய்! தம்பி..யார் நீ?....''

ஸ்ரீதரன் அந்த ஆளைப் பார்த்தான். ஸ்ரீதரன் அவனைப் பார்த்ததில்லை. வந்த ஆள் வேறு யாருமில்லை. போலீஸ்காரன் விநாயகம் தான். களவு போன அவனுடைய போலீஸ் டிரஸ்ஸை அன்றைக்கு எப்படியானும் கண்டு பிடித்து விடுவது என்று தீர்மானம் செய்து கொண்டு அவன் வந்திருக்கிறான். அவனைத் திருவல்லிக்கேணிக்கு வரச் சொல்லி அனுப்பியது ஹெட் கான்ஸ்டபிள்தான். விநாயகத்திற்கு அன்று எப்படியோ தைரியம் வந்து விட்டது. வெகு தைரிய

மாக, எப்படி அந்தக் கறுப்புக் கண்ணுடியிடம் சண்டை போடுவது என்றும் எப்படி அவனே மிரட்ட வேண்டும் என்றும் அவன் மனத்திற்குள் திட்டம் போட்டுக் கொண்டு வந்தான். முடிந்தால் அந்தக் கறுப்பு கண்ணுடியை அப்பொழுதே 'அரெஸ்ட்' செய்து விடுவது என்றும் தீர்மானித்தான். எதிர்த்தாற்போல் திடீரென்று ஒரு பையன் மூட்டை ஒன்றைத் தூக்கிக்கொண்டு எதிரில் வருவதைப் பார்த்ததும் அவனுக்குச் சந்தேகம் வர ஆரம்பித்தது. திருடர்களுக்கு உளவு சொல்லிக் கொடுக்க இந்த மாதிரிப் பையன்களே உபயோகப்படுத்துகிருர்கள் என்று அவன் கேள்விப்பட் டிருந்தான். 'இந்த வேளேயில் இந்தச் சிறுவன் மூட்டையோடு எங்கே போகிருன்?' என்ற எண்ணம் அவன் மனத்தில் ஓடியது. ஸ்ரீதரன் அவன் கேள்விக்கு உடனே பதில் சொல்லாமல் போகவே, அவன் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்துகொண்டான்.

''டேய்! தம்பி! எங்கே போறே? நீ யாரு?''

''அட நீ யாரு?'' என்ருன் ஸ்ரீதரன் தைரியமாக.

''ஓகோ... கான்ஸ்டபிள் விநாயகம் நான்'' அவன் கை மீசையை முறுக்கிவிட்டது.

''நான் யாரா இருந்தா உனக்கு என்ன?''

''மூட்டையிலே என்ன கொண்டு போறே? சொல்லு.''

''எது இருந்தா உனக்கு என்ன அப்பா?''

''என்ன இருக்கு? உண்மையைச் சொல்லிவிடு.''

''அதை யாரையா கண்டா?..'' ஸ்ரீதரனுக்கு உண்மையாகவே தெரியாது.





''அப்பா! என்னாலே இந்தப் பலூனை ஊத முடியல்லே, நீயாவது ஊதித் தாயேன்!''

---

''டேய், அதுலே இருக்கிறது என்னன்னு சொல்லத்தெரியல்லே! திருட்டுப்பயல்தான் நீ....''

''இந்தாய்யா! என்ன மிரட்டறே?''

''நட தம்பி! ஸ்டேஷனுக்கு..''

''முடியாது....''

''டேய்! ஒரு கல்தா குடுத்தேன்னா போலீஸ் ஸ்டேஷன்லே போய் விழுவே!''

''அவ்வளவு பலமா உனக்கு?..''

''என்ன தம்பி! மூட்டையைக் குடு, இப்படி..''

''முடியாது..வழியை விடு..''

பாய்ச்சல் விளையாட்டு விளையாடினார்கள் இருவரும்.

''டேய்! பிடிச்சேன்னா முழியைப் பிடுங்கிப்பிடுவேன்...''

ஸ்ரீதரன் தைரியமாகவே இருந்தான்.

''டேய்! போக்கிரிப் பயலே! மரியாதையாகக் குடுத்துடு...''

''சரிதாண்டா போடா'' என்றான் ஸ்ரீதரன்.

அதே சமயம், அங்கே மூன்றாவது ஆள் ஒருவன் சைக்கிளில் வேகமாக வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்ததும் விநாயகம் 'ஸல்யூட்' அடித்தான். வந்தவன் அந்த மோசக்காரக் கூர்க்கா. அவன் முதலியாரின் வீட்டிலிருந்து அப்பொழுதுதான் திரும்பிக்கொண்டிருந்தான். பையனிடம் கடிதத்தை வாங்கிப் பார்த்தானல்லவா! சிறிது நாழிகைக்கெல்லாம் புறப்பட்டு வந்து விட்டான்.

''ஏய்! விநாயகம் என்ன இது, குஸ்தி இங்கே?'' என்றான் அவன்.

''ஸார்: இந்தப் பையன்..சந்தேகமா இருக்கு..'' விநாயகம் அந்த ஆளைப் பார்த்ததில்லை. இருந்தாலும் கூர்க்காவைப் பார்த்துவிட்டால் அவனுக்கு ஒரு நடுக்கம்.

''இந்தப் பையன் இந்த மூட்டையை எடுத்துக்கிட்டு வந்தான், ஸார்! 'ஏதுடா'ன்னேன். சொல்லல்லே. 'அதுக்குள்ளாற என்னடா இருக்கு'ன்னு கேட்டேன். அதுவும் தெரியல்லே இவனுக்கு. பய முழி முழின்னு முழிக்கிறான்..'' என்றான் விநாயகம்.

அதைக் கேட்டு அந்தக் கூர்க்கா 'ஹ ஹ் ஹ ஹ...ஹா' என்று சிரித்தான். பிறகு விநாயகத்தின் தோளில் தட்டி, "நல்ல போலீஸ்காரர் ஐயா நீ!....நான்தான் இந்தப் பையனிடம் இதைக் கொடுத்து அனுப்பினேன் முன்னால் போகச் சொல்லி. அவனுக்கு எப்படித் தெரியும், அதற்குள் இருக்கிறது?....தம்பி! அந்த மூட்டையைக் கொடு..நேரமாகிறது..'' என்றான் அந்தக் கூர்க்கா. ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து நின்ற ஸ்ரீதரனிடமிருந்து மூட்டையை அந்தக் கூர்க்கா வாங்கிக் கொண்டான். இல்லை. பிடுங்கிக் கொண்டான் பலவந்தமாக.

''விநாயகம்! நீ போய் ராத்திரி நல்லாத் தூங்கு!..நான் வறேன். தம்பி! ரொம்பத் தாங்ஸ்....'' என்று சொல்லிவிட்டு, அந்தக் கூர்க்கா சைக்கிளில் ஏறி மறைந்தான். ஸ்ரீதரன், பிரமித்து நின்றான். அதே சமயம் அந்தத் தெருக்கோடியிலிருந்த ஒரு வீட்டிலிருந்து ஏதோ ஓர் உருவம் கதவை மெள்ளத் திறந்து கொண்டு வெளியே வந்தது. வெளியே வந்து, ''ஐயோ! திருடன்..திருடன்'' என்று குரல் கொடுத்தது. அது வேறு யாருமில்லை..சுப்புதான்!

(தொடரும்)

# குங்கிலியக் கலய நாயனர்

**கிங்கரன்**



வளமார் சோழ நாட்டின் திருக் கடையூரில் ஒரு பெரியவர் இருந்தார். அந்த ஊரில் எழுந் தருளி யிருக்கும் எம்பெருமானுக்கு இவர் எப்பொழுதும் குங்கிலியம் இட்டுத் தூபம் போடுவது வழக் கம். வறுமை வாட்டினுலும் அவர் குங்கிலியம் இடுவது நிற்பதில்லை. இதைக் கண்ட ஊரார் அவரைப் போற்றினுர்கள். குங்கிலியக் கலய ஞர் என்றே அவரைப் பெயரிட்டு அழைத்தார்கள்.

அவர் வறுமை உச்ச நிலையை அடைந்தது. கையில் பொருள் இல்லை. எனவே அவர் தம் மனைவி-யார் கழற்றிக் கொடுத்த தாலியை விற்று நெல் வாங்கிவர எண்ணி ஞர். சந்தைக்குப் போனபோது




நண்பன்: டேய், இதென்னடா வடையை அப்படி மோந்து பார்க்கிறே?

போலீஸ் நாய் வளர்ப்பவன்: இது எத்தனை நாளுக்கு முன்னே தயார் செய்ததுன்னு மோப்பம் பிடிச்சுப் பார்க்கிறேன்.

அங்கே ஒரு வியாபாரி குங்கிலியப் பொதி ஒன்றை வைத்திருப்பதைக் கண்டார். அதன் மணம் அவர் நினைவை மாற்றியது. நெல் தானியம் வாங்குவதை மறந்துவிட்டு, ஆண்டவனுக்குத் தூபமிட அந்தக் குங்கிலியப் பொதியை அப்படியே வாங்கிவிட்டார். பொன் தாலி விற்ற பணம் குங்கிலியப் பொதியாக அவர் தலையில் ஏறியது.

நேரே அவர் தாம் வணங்கும் பெருமான் சந்நிதியை அடைந்து, தூபக் கனலில் சிந்தை குளிர்ந்து, அங்கேயே உட்கார்ந்துவிட்டார்.

வீட்டிலே மனைவியும் மக்களும் அவர் நெல் வாங்கிவருவார் என்று வெகு நேரம் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். இருட்டிய பிறகும் அவர் வராததைக் கண்டு, குழந்தைகளைச் சமாதானப்படுத்தித் தூங்கச் செய்துவிட்டு, மனைவியாரும் படுத்துக்கொண்டார்.

தூக்கத்தில் மனைவியார் ஒரு கனவு கண்டார். இறைவன் திருவருளால் குபேரன் வீடெல்லாம் பொன்னும் நெல்லுமாகக் குவித்திருப்பதாகத் தோன்றியது. உடனே அந்த அம்மையார் விழித்துப் பார்த்தாள். என்ன ஆச்சரியம்! வீடு திருமகள் விலாசமாக மாறியிருந்தது.

கலயனார் மெல்ல வீடு வந்தார். மனைவியார் மூலம் நடந்ததை அறிந்தார். இறைவனுடைய திருவருளை வாழ்த்தி, உவகை பொங்கக் கைகளைக் கூப்பினார்.

அந்த நாளில் திருப்பனந்தாள் என்னும் ஊரில் உள்ள சிவலிங்கம் சிறிது சாய்ந்திருந்தது. யார் யாரோ வந்து பார்த்துவிட்டார்கள். சோழ மன்னன் எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தும் முடியாமல் மனம் வருந்தினான். கலயனார் இதை அறிந்து, எம்பெருமானை வணங்கி, திருப்பனந்தாளை அடைந்தார். மன்னன் மனத்தளர்ச்சியோடு இருந்தான். சிவலிங்கத்தை இழுத்து நிறுத்த முயன்ற யானைகள் சோர்ந்து விழுந்து கிடந்தன. இதைக் கண்ட கலயனார் வருத்தமுற்றார். இறைவனை மனத்தில் எண்ணி, ஒரு சிறு கயிற்றை லிங்கத்தில் கட்டி, மெதுவாக இழுத்தார். அடுத்த கனமே சாய்ந்த லிங்க வடிவம் மெல்ல நிமிர்ந்தது. மன்னனும் மற்றவர்களும் இதைக் கண்ணுற்று மகிழ்ந்து, கலயனாரை வணங்கினார்கள். கலயனார் குங்கிலியத் தூபம் போட்டு இறைவனை வழிபட்டுவிட்டு ஊர் திரும்பினார்.

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் அவரைச் சந்தித்து அவரைப் பாராட்டினார்கள். குங்கிலியக் கலய நாயனார் வெகு காலம் குங்கிலியத் திருப்பணி செய்து, இறைவன் திருவடியை அடைந்தார். இறைவன் திருவடி தானே மக்களின் இருதய பீடம்? இன்னும் நம் இதயங்களில் வாழும் அவர் புகழ் இறைவன் திருவடியில் உறைவதைத்தானே குறிக்கிறது?


பாய்மரம் விரித்து, மணிபல்லவம் நோக்கிச் செல்லும் கப்பலிலே, கிழவர் ராஜகுமாரியிடம் பழைய கதையைக் கூறத்தொடங்கினர். தளத்தில் அமர்ந்து ராஜகுமாரி அதைக் கேட்கலானாள்.
பெரியவரே! சொல்லுங்கள், கேட்போம்!
ஆம்: என் கதைதான் சோழ நாட்டின் கதை!
கிழவன் ராஜகுமாரியிடம் பூம்புகார் நகரத்தின் விவரத்தைச் சொல்லி இந்திரன் சாபத்தாலும், மணிமேகலையின் சாபத்தாலும் பூம்புகார் கடல் கோளுக்கு ஆளாகியது என்றான்.
சோழ வளநாட்டின் கடைசி வேந்தன் நெடுமுடிக்கிள்ளிக்குப் பிறகு நாட்டை ஆள அரசன் இல்லை. ஆனால் அரச வம்சத்தில் ஒரே ஒரு இளைஞன் மட்டும் ஆரூர் என்னும் நகரில் இருந்தான்........




EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

ஆம் அட்டை தொடர்ச்சி]

பின்னர், 'கண்ணன்' பத்திரிகை வழக்கமாக நடத்திவரும் தொடர் கதைப் போட்டியில் இவ்வாண்டு முதற் பரிசு பெற்றிருக்கும் 'கறுப்புக் கண்ணுடி' என்ற கதையின் ஆசிரியர் புதுக்கோட்டை ஸ்ரீ சத்தியமூர்த்தி (பூரம்) அவர்களை வெகுவாகப் பாராட்டி, வளரும் எழுத்தாளர் சங்கத் தின் சார்பில் திரு. மா. கி. மயிலன் பேசினுர். திரு. பூரம் அவர்கள் நிகழ்த்திய நன்றியுரையில், தமது சக எழுத்தாளர்கள் தம்மை உள்ளன் புடன் பாராட்டியதற்கு வந்தனம் தெரிவித்தார். மற்ரூர் எழுத்தாள ராகிய திருமங்கலம் திரு. கே. கண்ணுச்சாமி (கூட்டத்தில் கலந்து கொள்வதாகத் தெரிவித்திருந்தவர்) எதிர்பாராத பல அலுவல்கள் காரணமாக வர இயலவில்லை.

அடுத்து, வளரும் எழுத்தாளர் சங்கம் நடத்திய கவிதைப் போட்டி யில் முதற்பரிசு பெற்ற திரு ரெ. மல்லப்பிள்ளைக்கு அழகிய புத்தகங்கள் இரண்டு பரிசாக அளிக்கப்பட்டன. அன்று பேசிய சொற்பொழிவாளர் களையும், அவர்கள் பேச எடுத்துக்கொண்ட பொருளையும் அடியில் காணலாம்.

| | | |
|---|---|---|
| 1. சிறுகதையில் மறுமலர்ச்சி | .. | ர. தங்கவேலன் (திருச்சி) |
| 2. ஆரம்பிப்பது எப்படி? | .. | எஸ். விசுவநாதன் (சேலம்) |
| 3. குழந்தை இலக்கியம் | .. | வடமலையழகன் (புதுக்கோட்டை) |
| 4. சிறுகதை இலக்கியம் | .. | கா. தமிழ்த்தம்பி (மதுரை) |
| 5. பாரதியார் கவிதை | .. | ரெ. மல்லப்பிள்ளை (திருப்பராய்த்துறை) |
| 6. முத்தமிழ் | .. | என். ஜனு (தஞ்சை) |
| 7. தனித்தமிழ் | .. | எஸ். லெயோ ஜோஸப் (திருச்சி) |
| 8. வளரும் தமிழ் | .. | நிலவுச்சிரிப்பன் (சேலம்) |
| 9. ''தமிழ்க்கல்வி'' | .. | எஸ். லெனின் (பொன்மலை) |
| 10. மாணவர்கள் எழுதலாமா? | .. | கமலன்பன் |
| 11. கதையா, கட்டுரையா? | .. | மா. கி. மயிலன் |

இந்த அட்டவணையைக் கண்டே, வாசகர்கள் அன்றைச் சொற் பொழிவுகள் எவ்வளவு சுவையாக இருந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். திரு தங்கவேலன், சிறுகதையில் மலர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கூறுவது எவ்வளவு தூரம் சரியானது என்பதை விளக்கிப் பேசி ஞர். எஸ். விசுவநாதன், கதைகளின் ஆரம்பம் கவர்ச்சிகரமாக அமைய வேண்டும் என்பதை வற்புறுத்தி உரை நிகழ்த்திஞர். குழந்தை இலக்கி யம் தூய்மையானதாகவும் நீதி புகட்டுவதாகவும் இருக்க வேண்டும், துப்பாக்கி வேட்டுகளும், கொலைகளும், கொள்ளைகளும் நிறைந்த கதை களுக்குக் குழந்தை இலக்கியத்தில் இடமில்லை என்பதை அழகாக எடுத் துக் கூறினுர் திரு வடமலையழகன். இவ்வாறே அன்றைப் பேச்சரங்கில் கலந்து கொண்ட மற்ற எழுத்தாளர்களும் ஒவ்வோர் அரிய கருத்தை வைத்துப் பேசினுர்கள். ஒவ்வொருவரும் எவ்வித அச்சமுமின்றி, தமக்குத் தோன்றிய கருத்துக்களைத் தெளிவுற எடுத்துக் கூறினுர்கள். இது சம்பந்தமாக விழாத்தலைவர், ''பேச்சாளனுக வேண்டுமா!'' என்ற தலைப்பில் கண்ணனில் வெளிவந்த கட்டுரை ஒன்றைப்பற்றி ஞாபகப் படுத்தியது பொருத்தமாக இருந்தது. தலைவர் முடிவுரைக்குப்பின், சங்கப் பொருளாளர் திரு. கோபாகி நன்றி கூறினுர். திரு. ரெ. மல்லப் பிள்ளை, 'வாழிய செந்தமிழ்' பாடியபின் கூட்டம் இனிது முடிவுற்றது.

சுமார் இரண்டரை மணி நேரம் நடைபெற்ற இப்பேரவைக்கு வந்திருந்த அனைவரும், அமைதியுடன் விழா நிகழ்ச்சிகளைக் கவனித்தது பாராட்டுக்குரியது. வெளியூர் அங்கத்தினர்களின் ஞாபகமாக ஒரு புகைப்படமும் எடுக்கப்பட்டது.

—ஸ்புட்னிக்.

(Regd. as a Newspaper in Ceylon.) Regd. No. M.



# கண்ணன்

## வெளியீடுகள்

| | | | ரூ. நயா பைசா |
|---|---|---|---|
| 1. | தங்க மாம்பழம் | ராஜி | 2·00 |
| 2. | வீடர் மணி | ஆர்வி | 1·50 |
| 3. | சைனா சு-சூ | ஆர்வி | 1.50 |
| 4. | ஜிம்மி | பெ. தூரன் | 1·50 |
| 5. | சந்திரகிரிக் கோட்டை | ஜனா | 1·25 |
| 6. | அசட்டுப் பிச்சு | ஆர்வி | 1·00 |
| 7. | மஞ்சள் பங்களா | ஜி. ஜயராமன் | 1·00 |
| 8. | சின்ன ராஜா | வாசகன் | 0·75 |
| 9. | பவழவல்லி | கி. ரா. | 0·75 |
| 10. | கவிஞர் கதை | கி. வா. ஜ. | 0·62 |
| 11. | விளையும் பயிர் | கி. வா. ஜ. | 0·50 |
| 12. | சமர்த்து மைனா | தி. ஜ. ர. | 0·50 |
| 13. | அபாயச் சங்கு | நீலம் | 0·50 |
| 14. | ஜக்கு | ஆர்வி | 0·50 |
| 15. | ஜம்பு | ஆர்வி | 0.50 |
| 16. | ஏரிக்கரை மாளிகை | ஜனா | 0·50 |
| 17. | மின்னல் அரக்கன் | ஜனா | 0·50 |
| 18. | ராஜாவும் குருவியும் | சோமசன்மா | 0·50 |
| 19. | கழுகும் கிளியும் | சோமசன்மா | 0·50 |
| 20. | தவளையும் காளையும் | சோமசன்மா | 0·50 |
| 21. | விஞ்ஞானம் பேசுகிறார் | பெ. நா. அ. | 0·50 |
| 22. | பாரஸீக ரோஜா | ஆர்வி: ஸாமி | 0·32 |
| 23. | புலிக் குட்டி | ஆர்வி: ஸாமி | 0·40 |
| 24. | தூங்கும் அழகி | ஆர்வி: ஸாமி | 0·25 |
| 25. | குளிகைத் தீவு | ஆர்வி: சங்கர் | 0·25 |
| 26. | மாஸ்டர் பாலகுமார் | ஆர்வி: ஸாமி | 0·25 |
| 27. | நீச்சல் பழக்கம் | டிமான்ஸ்டிரேட்டர் | 0·20 |
| 28. | பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் | எஸ். ஜே. | 0·20 |
| 29. | கோழி விதைத்த நெல் | சூடாமணி | 0·20 |
| 30. | தங்கத்தின் பந்து | சூடாமணி | 0·20 |
| 31. | என் பேர் என்ன? | சூடாமணி | 0·20 |

சந்தாதார்களுக்குக் கமிஷன் உண்டு

ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையில் உள்ளவர்களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் உள்ளன.

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை -4.**